விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 039 வள்ளுவர் ஆண்டு 2056 தை 14 திங்கட்கிழமை (27.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## விடுதலைப் புலிகள் மீள் எழுச்சியா?

## அதை மகிந்த தரப்புக் கூறவேண்டும்

### புலிக்கதை கூறும் மகிந்தவிடம் இயம்பியது அரசு




(கொழும்பு) புலிகளின் மீள் எழுச்சியின் காரணத்தால் தமது பாதுகாப்புக்கு ஆபத்து என முன்னாள் ஜனாதிபதி மகிந்த தரப்பினர் தெரிவித்து வரும் நிலையில், மீண்டும் விடுதலைப் புலிகளின் எழுச்சி ஏற்படக்கூடும் எனக் கருதினால், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அத்தகவல்களை நீதிமன்றம் ஊடாக நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என அரசாங்கம் கேட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)



## தடம்புரண்டது யாழ் ராணி கடுகதி

(ஓமந்தை)



யாழ்ப்பாணம் காங்கேசன் துறையிலிருந்து கொழும்புக் கோட்டை நோக்கிப் பயணித்த யாழ் ராணி கடுகதி புகையிரதம் ஓமந்தைப் 15

## கசூரினாக் கடலில் விசப் பாசித் தாக்கம்

### 6 பேர் வைத்தியசாலையில்

(காரைநகர்)

யாழ்ப்பாணம் காரைநகர் கசூரினா 15

## ரோஹிங்கியா அகதிகளை இலங்கை பாதுகாக்கும்

### ஐ.நா நம்பிக்கை

(கொழும்பு)

மியன்மாரில் இருந்து அகதிகளாக வந்துள்ள ரோஹிங்கியா முஸ்லிம் மக்களை இலங்கை பாதுகாப்புடன் நடத்தும் என்று நம்புகிறோம்.

இவ்விவகாரம் தொடர்பில் ஆராய ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தொடர்பான முக்கியஸ்தர்கள் குழு அடுத்த மாதம் 19 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற் 15


## அநுரவின் ஆட்சியில் மீண்டும் விசாரணை

# அனைத்துக் குற்றவாளிகளும் நீதியின் முன் நிறுத்தப்படுவர்!

### அமைச்சர் ஆனந்த விஜேபால உறுதி

(கொழும்பு)

வசீம் தாஜுதீன் கொலை, லசந்த விக்கிரமதுங்க கொலை மற்றும் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை உட்பட கடந்த காலத்தில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பான விசாரணைகளை அநுர அரசாங்கம் மீண்டும் ஆரம்பித்துள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)



## மீனவர்களுக்கும் காப்பீட்டுத் திட்டம்

(காலி)



மீனவர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார். 03

## எம்.ஏ.சுமந்திரனுக்கு 2 மெய்ப் பாதுகாவலர்

### அரசியலில் கிளம்பியது சர்ச்சை

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனுக்கு இரண்டு மெய்ப்பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு எம்.ஏ.சுமந்திரனுக்கு அநுர அரசாங்கம் இரண்டு மெய்ப் 15

## நாட்டை உலுக்கிய துப்பாக்கி சூடுகளுடன் தொடர்புடைய 84 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியாக முன்னெடுக்கப்படுகின்ற குற்றத்தடுப்பு விசேட 02

## அரசியல்வாதிகளுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

### ஆராய்கிறது சட்டமா அதிபர் திணைக்களம்

(கொழும்பு)

அரசியல்வாதிகள் உள்ளிட்ட சிலருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்வது குறித்து ஆராயப்பட்டு வருவதாகச் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில சர்ச்சைக்குரிய சம்பவங்களுடன் அரசியல்வாதிகள் தொடர்புபட்டுள்ளமை தெரியவந் 15

அதிசொகுசு பகல் நேர
புதிய பஸ் சேவை ஆரம்பம்
கந்தசாமி ராவல்ஸ்

ஆரம்பம் :- 31.01.2025 நேரம் :- 8.30 AM
பருத்தித்துறை, நெல்லியடி, கோப்பாய், மருதனார்மடம், யாழ்ப்பாணம் ஊடாக கொழும்பு.
கொழும்பு வெள்ளவத்தையிலிருந்து பருத்தித்துறை வரையிலான புதிய பஸ் சேவை ஆரம்பம்
பருத்தித்துறை - 077 742 7741
கொழும்பு - 077 720 1309
(3226)

## அடிப்படைச் சம்பள அதிகரிப்பு மூன்று வருடத்துக்குள் முடிவு

### அநுராதபுரத்தில் அநுர தெரிவிப்பு

(அநுராதபுரம்)

அரச ஊழியர்களுக்கான நியாயமான அடிப்படைச் சம்பள அதிகரிப்பு மற்றும் ஓய்வூதியம் பெறுவோரின் சம்பள முரண்பாடுகளை 15



நடுவு நிலை தவறாது நீதியை உரைக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலவச அதிஷ்டலாப சீட்டிழுப்பு முடிவு

யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி - 2025

காட்சிக்கூட இலக்கம் 34

நந்தலாலா இரும்பகம்

சீட்டிழுப்பு முடிவு 1ம் பரிசு இல. : 070

ஆறுதல் பரிசுகள் இல.

49 84 64 97 22

96 44 04 07

தொடர்புகளுக்கு : 077 780 5950

(3232)

## அனைத்து...

குறித்த விசாரணைகள் எந்தவிதமான அரசியல் தலையீடுகளும் இன்றி மேற்கொள்ளப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நாட்டில் மிக மோசமான குற்றச்செயல்கள் நடந்துள்ளன.

அவை விசாரணைகள் இன்றி அல்லது விசாரணைகள் முடிக்கப்படாமல் கைவிடப்பட்டுள்ளன.

எனினும் அநுர அரசாங்கம் அது தொடர்பில் மௌனமாக இருக்கமாட்டாது.

கடந்த காலத்தில் நடந்த கொலைச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்படும்.

இதில் சில விசாரணைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில வழக்குகள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் நடந்த அனைத்துக் குற்றங்கள் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்பட்டுக் குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள்.

இந்த விசாரணைகள் அரசியல் நலன்களின் அடிப்படையில் நடத்தப்படுவதில்லை என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். (ந-7)

## துப்பாக்கி...

சோதனை நடவடிக்கைகளில், கடந்த நாட்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய 84 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர்புடைய 249 பேரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 4,020 பேரும் கைது செய்யப்பட்டுள்ள அதே நேரம் ரி56 ரக 3 துப்பாக்கிகளும் 5 கைத்துப்பாக்கிகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க இந்த விடயங்களை வெளிப்படுத்தினார். (ந-7)

# மரண அறிவித்தல்

## துரைராசா உதயசங்கர்

(தபால் நிலைய ஊழியர் – மூங்கில் உணவகம்)



தோற்றம் 07.10.1983 — மறைவு 24.01.2025

கொக்குவில் மேற்கு ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா உதயசங்கர் கடந்த 24.01.2025 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா மற்றும் வாலாம்பிகை தம்பதியரின் அன்புப் புதல்வனும் மேனகா, கௌரி, பிரதீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கெவின், பென், கிருஷ், சிவனியா, மகனியா ஆகியோரின் பாசமிகு மாமனும் பெனடிக், சிவகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

076 657 8654

தகவல் : குடும்பத்தினர்


(3231)

# 3ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## முருகையா நகுலேஸ்வரன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



தோற்றம் 21.01.1941 — மறைவு 15.01.2022

திதி – திரியோதசி

கண்ணுக்கு நிலவாய் நெஞ்சத்தில்
அன்பால்மண்ணில் என்றும்
எங்களோடு கண்கண்ட
தெய்வமாய் வாழ்ந்த
விண்ணுக்கு வாழச் சென்று
மூன்று வருடமாகிற்றே!

185/1, கில்னர்லேன், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர் 021 221 6742

(3229)

# முதலாம் ஆண்டு நினைவுநாள் அழைப்பு

மலர்வு 1955 . 04 . 19



உதிர்வு 2024 . 02 . 07

## அமரர் லீலாவதி(லீலா) மகேந்திரன்

("தென்றல்" காகிதாதிகள், பல்வகை அங்காடி – உரிமையாளர்)

உங்கள் மதிமுகமும், மகிழ்வான பேச்சும், அழகான
புன் சிரிப்பும் மறைந்து ஓராண்டு கடந்தாலும் உங்கள்
நினைவு என்றும் எம் மனதில் இருக்கும். எண்ணிப் பார்க்க
இதயங்கள் கனக்கின்றன. எமக்கு ஆறுதலாக இருந்த
உங்களை எங்கள் உள்ளமதில் இருத்தி ஆத்மா
சாந்தியடைய நினைவு கூருகின்றோம்.

27.01.2025 இன்று திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


"பழம் நீ"
அறிவாலயம், கரணவாய்,
கரவெட்டி.

குடும்பத்தினர் 077 819 2840

(3223)

# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 30 . 10 . 1948



மறைவு 31 . 12 . 2024

எம்மை நீங்காத் துயரில் ஆழ்த்தி விட்டு கடந்த 31.12.2024 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சின்னையா சுப்பிரமணியம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 28.01.2025 செவ்வாய்க்கிழமை காலை 5.00 மணியளவில் புனித கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்று மறுநாள் 29.01.2025 புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் சபிண்டீகரணக் கிரியையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பதாகைகள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

(3228)

உபயகதிர்காமம்,
புலோலி தெற்கு,
புலோலி.

021 226 2712
077 664 8652

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக விலைக்கு அரிசி விற்றால் ஒரு லட்சம் ரூபாய் தண்டம்!

## நுகர்வோர் அதிகாரசபை எச்சரிக்கை

**(கொழும்பு)**

**கட்டுப்பாட்டு விலைக்கு மாறாக அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்தால் ஒரு இலட்சம் ரூபாய் தண்டப் பணத்துடன் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்தார்.**

நுகர்வோர் அதிகார சபையின் சுற்றிவளைப்புக்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒருசில அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் நிர்ணய விலைக்கு மாறாகவே பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் முறைப்பாடளித்துள்ளனர்.

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கட்டப்பாட்டு விலைக்கு மாறாக அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்தால் ஒரு இலட்சம் ரூபா தண்டப் பணத்துடன் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒருசில பகுதிகளில் பகல் வேளையில் ஒரு விலைக் கும், இரவு வேளைகளில் பிறிதொரு விலைக்கும் அரிசி விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் முறைப்பாடளித்துள்ளார்கள்.

ஆகவே 24 மணித்தியாலமும் சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-8)

## ஜனாதிபதி அநுர யாழ்.விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதன்போது யாழ். மாவட்ட செயலகத்தில் விசேட மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார பாராளுமன்றத் தேரதல் நடைபெறுவதற்கு முன்னதாக கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார்.

இந்நிலையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்ததன் பின்னர் ஜனாதிபதி அநுரகுமாரவின் முதல் யாழ் விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# கடற்றொழிலாளர்களுக்கு காப்பீட்டுத் திட்டம்; அறிமுகப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

கடற்றொழிலாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார்.

காலிப் பகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே பிரதி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், இதற்காக ஒரு காப்பீட்டு நிறுவனம் ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ளது.

எதிர்வரும் வரவு- செலவுத் திட்டத்திற்கு பின்னர் கடற்றொழிலாளர்களுக்கு இந்தக் காப்பீட்டுத் திட்டத்தை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



மேலும், மொத்த மற்றும் பகுதி சொத்து சேதம் மற்றும் உயிர் இழப்பு ஏற்பட்டால் சலுகைகள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (நி-8)

# நெல்லை அரசாங்கத்திற்கு விற்பனை செய்யப் போவதில்லை

## ஒன்றிணைந்த விவசாய அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு நெல்லை விற்பனை செய்யப்போவதில்லை என ஒன்றிணைந்த விவசாய அமைப்பின் தலைவர் எஸ்.கே.மகிந்த சமரவிக்ரம தெரிவித்துள்ளார்.

தனியார் வியாபாரிகள் வயலுக்கே சென்று பச்சை நெல் ஒரு கிலோவிற்கு (உலர்த்தப்படாத நெல்) 150 முதல் 170 ரூபா வரையிலான விலையில் கொள்வனவு செய்வதற்கு தயாராக உள்ளனர். எனவே தனியார் துறையினருக்கு நெல்லை விற்பனை செய்வதனைத் தவிர்த்து குறைந்த விலைக்கு அரசாங்கத்திற்கு விற் பனை செய்யத் தயா ரில்லை.

இந்த அரசாங்கம் எதிர்க் கட்சியில் இருந்த காலத்தில் கூறிய எதனையும் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் செய்வதில்லை

இவ்வாறான ஓர் பின்னணியில் எவ்வாறு அரசாங்கம் நெல்லுக்கு உத்தரவாத விலையை நிர்ணயிக்கும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (நி-8)

# மூன்று பேருந்துகள் மோதி விபத்து

## 29 பேர் மருத்துவமனையில்

(கொழும்பு)

காலி, இமதுவ, அங்குலுகஹா சந்தியில் மூன்று பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்திற்கு உள்ளானதில் 29 பேர் வரை காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இரண்டு தனியார் பயணிகள் பேருந்துகளும், அலுவலக ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்தும் ஒன்றுமே விபத்தில் சிக்கியுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

நிறுத்தப்பட்டிருந்த பேருந்தொன்றில் பயணித்துக் கொண்டிருந்த பேருந்து மோதியதுடன் அதன் பின்னால் வந்த மற்றொரு பேருந்து அதன் மீது மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் 29 பேர் காயமடைந்துள்ளதுடன் அவர்களில் 23 பேர் இமதுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 6 பேர் கராபிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

# எந்தவொரு விசாரணைகளிலும் அரசாங்கம் தலையிடாது!

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



(கொழும்பு)

"எந்தவொரு விசாரணைகளிலும் அரசாங்கம் தலையிடாது எனவும் விசாரணைகளை மேற்கொள்பவர்களை பலப்படுத்துவதற்கு மாத்திரமே நடவடிக்கை எடுக்கப்படும்" எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹோமாகம - பிட்டிபன பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது கடந்த 9 வருடங்களாக மறைக்கப்பட்டிருந்த கோப்புகள் தற்போது திறக்கப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், அரசாங்கம் எந்தவொரு நபர்களையோ, வழக்குகளையோ தெரிவு செய்வதில்லை எனவும், உரிய வகையில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு மாத்திரமே சட்ட அமுலாக்க நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குவதாகவும், ஒருபோதும் அரசாங்கம் விசாரணைகளில் தலையிடாது எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் இன்னும் ஓரிரு வாரங்களில் உள்நாட்டு சந்தையில், நிர்ணய விலைக்கு புறம்பாக சந்தையில் அரிசியை விற்பனை செய்யும் செயற்பாடு முற்றாக ஒழிக்கப்படும் எனவும் தற்போது உடனடியாக இதனை செய்வதற்கு முயன்றால் பாரிய நெருக்கடி ஏற்பட்டுவிடும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## மழையால் பறிபோனது இங்கிலாந்தின் வெற்றிக் கனவு



மகளிர் இங்கிலாந்து அணிக்கு எதிரான 2 ஆவது ரி-20 போட்டியில் அவுஸ்திரேலியா 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கான்பெர்ராவில் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ரி-20 போட்டி இடம் பெற்றது

நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சை தெரிவு செய்ய, அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாடியது. பெத் மூனே அதிரடியாக 31 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அணித்தலைவர் டலியா மெக்ராத் ஆட்டமிழக்காமல் 35 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 48 ஓட்டங்கள் விளாசினார்.

அதேபோல் கிரேஸ் ஹாரிஸ் ஆட்டமிழக்காமல் 17 பந்துகளில் 3 சிக்ஸர், 2 பவுண்டரிகளுடன் 35 ஓட்டங்கள் குவித்தார். இதன்மூலம் அவுஸ்திரேலிய அணி 185 ஓட்டங்கள் குவித்தது. சார்லி டீன் 2 விக்கெட்டுகளும், கெம்ப் மற்றும் சோபி தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

பின்னர் ஆடிய இங்கிலாந்து அணியில் மையா பௌசியர் 13 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஆனாலும் டேனியில்லே வயட் மற்றும் சோஃபியா டங்க்லே அதிரடியில் மிரட்டினர்.

இந்தக் கூட்டணி 42 ஓட்டங்கள் குவிக்க, அரைசதம் அடித்த வயட் 52 (40) ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து சோஃபியா டங்க்லே 22 பந்துகளில் 32 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மேகன் ஓவரில் கிளீன் போல்டு ஆனார்.

எனினும் அணித்தலைவர் ஹீதர் நைட் ருத்ர தாண்டவம் ஆடினார். இதனால் இங்கிலாந்து அணி வெற்றியை மிக விரைவாக நெருங்கியது.

கடைசி 5 பந்துகளில் 18 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் மழை குறுக்கிட்டது. இதனால் டக்வொர்த் லீவிஸ் விதிப்படி அவுஸ்திரேலிய அணி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இந்த வெற்றி மூலம் அவுஸ்திரேலிய அணி ரி-20 தொடரை கைப்பற்றியது. கடைசி ரி-20 போட்டி இன்று இடம் பெறும். (6-8)

## காயத்தால் விலகிய ஜோகோவிச் இறுதிக்கு முன்னேறிய ஸ்வெரேவ்





நடப்பு அவுஸ்திரேலிய ஓபன் ஆடவர் ஒற்றையர் அரை இறுதி ஆட்டத்தின் போது காயம் காரணமாக விலகினார் நோவக் ஜோகோவிச். இதனால் இறுதிப் போட்டிக்கு ஜெர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரேவ் முன்னேறியுள்ளார்.

இந்த ஆட்டம் தொடங்குவதற்கு முன்பாக 37 வயதான செர்பியாவின் ஜோகோவிச், இடது காலில் டேப்புகளை ஒட்டிக் கொண்டு களம் கண்டார். கால் இறுதிப் போட்டியில் அல்கராஸ் உடன் விளையாடிய போது அவர் காயமடைந்தார்.

"காயம் காரணமாக விலகும் வீரரை பார்வையாளர்கள் இகழ்வதை ஏற்க முடியாது. அப்படி யாரும் செய்யக்கூடாது. அனைவரும் டிக்கெட்டுக்கான கட்டணத்தை செலுத்தி உள்ளீர்கள். 5 செட் கொண்ட போட்டியை பார்க்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன் வந்து இருப்பீர்கள். அதே நேரத்தில் இதற்கு முன்பு காயம் கொடுத்த வலியை தாங்கிக் கொண்டும் அவர் பட்டம் வென்றதை கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். அதனால் அவரது முடிவுக்கு கொஞ்சம் மதிப்பு கொடுங்கள்" என களத்தில் பேட்டி அளித்த அலெக்ஸாண்டர் ஸ்வெரேவ் தெரிவித்தார்.

இந்த நிலையில் ஸ்வெரேவ் உடனான அரை இறுதி ஆட்டத்தில் முதல் செட்டை 6-7 என்ற கணக்கில் இழந்தார் ஜோகோவிச். தொடர்ந்து அவருடன் பரஸ்பரம் கை குலுக்கி விட்டு களத்தில் இருந்து விடை பெற்றார். அப்போது அவரை பார்வையாளர்கள் இகழ 'தம்ப்ஸ் அப்' காட்டியபடி சென்றார்.

நாளை நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் நடப்பு சம்பியனான சின்னர் மற்றும் பென் ஷெல்டன் ஆகியோர் இடையேயான இரண்டாவது அரை இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் வீரரை ஸ்வெரைவ் எதிர்கொள்ள உள்ளார். (6-8)

## சிறந்த வீரர்களாக இந்திய அணியிலிருந்து நால்வர் தெரிவு



சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) ஆண்டுதோறும் சிறந்த டெஸ்ட் ஒருநாள், ரி-20 அணிகள் மற்றும் சிறந்த வீரர், வீராங்கனைகளைத் தேர்வு செய்து கௌரவித்து வருகிறது.

அந்த வகையில் கடந்த ஆண்டின் சிறந்த ஆண்கள் ரி-20 அணியை ஐ.சி.சி. அறிவித்தது. இந்த அணியின் கப்டனாக இந்தியாவின் ரோகித் சர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த அணியில் இந்தியாவைச் சேர்ந்த 4 வீரர்கள் இடம் பிடித்துள்ளனர். அதில் ரோகித் சர்மா, ஓல்-ரவுண்டர் ஹர்திக் பாண்ட்யா, வேகப்பந்து வீச்சாளர் பும்ரா, அர்ஷ்தீப் சிங் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர். (6-8)

## வோர்ன்-முரளி 2025 டெஸ்ட் கிரிக்கெட் தொடர் இலங்கை அணி அறிவிப்பு




காலி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள வோர்ன் - முரளி 2025 டெஸ்ட் கிரிக்கட் தொடருக்காக இலங்கை அணி பெயரிடப்பட்டுள்ளது.

இலங்கை அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் இரண்டு டெஸ்ட் போட்டிகள் இடம பெறவுள்ளன.

இதில் முதல் போட்டி 2025 ஜனவரி 29ஆம் திகதியன்று ஆரம்பமாகவுள்ளது.

தனஞ்செய டி சில்வாவின் தலைமையில் பத்தும் நிசங்க, திமுத் கருணாரட்ன, தினேஸ் சந்திமல், அஞ்சலோ மெத்தியூஸ், கமிந்து மெண்டிஸ், குசல் மெண்டிஸ், ஓசாட பெர்ணான்டோ, லஹிரு உதார, சதீர சமரவிக்ரம, சோனால் தினுஷ, பிரபாத் ஜயசூரிய, ஜெப்ரி வெண்டர்சே, நிசான் பீரிஸ், மிலான் ரத்நாயக்க, அசித்த பெர்ணான்டோ, விஸ்வ பெர்ணான்டோ மற்றும் லஹிரு குமார ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர். (நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பென்சில்களில் தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள்

## எச்சரிக்கும் மருத்துவர்கள்

**(கொழும்பு)**

**சந்தையில் கிடைக்கும் பெரும்பாலான பென்சில்களில் குழந்தைகளின் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் பல இரசாயனங்கள் இருப்பதாக மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.**



(கொழும்பு)

இதன் விளைவாக, பென்சில்களை மெல்லும் குழந்தைகள் பல நீண்டகால நோய்களால் பாதிக்கப்படலாம் என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

பாடசாலைக் குழந்தைகள் பயன்படுத்தும் பென்சில்கள் இன்று சந்தையில் பல்வேறு வண்ணங்களில் கிடைக்கின்றன.

இறக்குமதி செய்யப்பட்ட பென்சில்கள் வண்ணமயமான மற்றும் கவர்ச்சிகரமான தோற்றத்தில் காணப்படுவதால் குழந்தைகள் அவற்றை வாங்க மிகவும் ஆர்வம் காட்டுகின்றனர்.

பென்சிலால் எழுதும் போதிலும், பென்சிலை கூர்மையாக்கும் தருணத்திலும் குழந்தைகள் தங்களை அறியாமலேயே பென்சிலை வாயில் வைக்கிறார்கள்.

குறிப்பாக பென்சில்கள் கவர்ச்சி இருப்பதற்கு அவற்றிற்கு அதிக அளவு இரசாயனங்கள் மற்றும் பாதரசம், ஆர்சனிக் மற்றும் காட்மியம் போன்ற கன உலோகங்கள் பூசப்படுகின்றன என மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, குழந்தைகள் பென்சில்களை வாயில் வைத்து மெல்லும் போது அவர்களின் உடலில் நுழையும் இந்த இரசாயனங்களின் தாக்கங்கள் மிகவும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.


பென்சில்கள் மற்றும் வண்ண பென்சில்கள் உற்பத்திக்கு ஒரு சர்வதேச தரநிலை உள்ளது. மேலும் EN71-3 தரநிலைக்கு சான்றளிக்கப்பட்ட பென்சில்கள் 19 வகையான கன உலோகங்களிலிருந்து உடலுக்குப் பாதுகாப்பை வழங்குகின்றன.

இருப்பினும், தற்போது சந்தையில் உள்ள பல பென்சில்கள் இந்த சர்வதேச தரத்திற்கு இணங்க உட்பட வில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (நி-8)

25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 04 - 1933

மறைவு 27 - 01 - 2000



அமரர். சின்னக்குட்டி- குண்டுமணி

(கமலமணி பூட்ஸ் வெயர்)

அன்பின் உருவாய் ஆனீர்
பண்பில் உயர்ந்து நின்றீர்
உழைப்பில் உன்னதம் கண்டீர்
எம்மைவிட்டு ஏன் சென்றீர்?

ஆண்டுகள் இருபத்தைந்து கடந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்களுடன்

" நிகன் வைத்திய நிலையம்"
கலைமகள் வீதி,இமையாணன் கிழக்கு
உடுப்பிட்டி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C-2136)

# இராசிபலன்

27.01.2025
தை 14, திங்கட்கிழமை
திரயோதசி முன்னிரவு 8.29 மணிவரை

மூலம் முற்பகல் 8.50 மணிவரை
சுபநேரம் 12.36-2.06 மணிவரை
இராகுகாலம் 8.06-9.36 மணிவரை

பிரதோச விரதம்
சந்திராஷ்டமம்
மிருகசீரிடம்

வளவன்

**மேஷம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு, ரோக பயமுண்டு.

**இடபம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்** எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**கடகம்** செய்தொழிலில் உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், சச்சரவைவிட்டு சாதித்துக் காட்டும் நாள், கௌரவமான நாள்.

**சிம்மம்** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

**கன்னி** பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**துலாம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மகரம்** பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும், பக்குவமாகப்பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**கும்பம்** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தொலைபேசி வழியில் தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள்.

**மீனம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் மேன்மையுண்டு.

**மனித குலத்திற்கு சேவை செய்வதே மிக உயர்ந்த வழிபாடு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் இடம்பெற்ற இந்திய குடியரசு தின நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் 76 ஆவது குடியரசு தினமான நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தில் இந்திய குடியரசு தின நிகழ்வுகள் இடம் பெற்றன.

யாழ்.மருதடி லேனில் உள்ள யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதரகத்தில் யாழ். இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி இந்தியத் தேசிய கொடியை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து இந்திய ஜனாதிபதியின் குடியரசு தின வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன. (நி-8-33)

# மக்கள் தொடர்பகம் புதுக்குடியிருப்பில் திறப்பு



(வவுனியா)

வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகம் நேற்று முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாறு திறந்து வைக்கப்பட்டுள்ள புதுக்குடியிருப்பு மக்கள் தொடர்பகமானது வாரநாட்களில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மக்களின் குறைகளைக் கேட்டறிவதற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-8-299)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கஸ்தூரி வெண்டி

**Botanical name- Hibiscus abelmoschus**
**Family- Malvaceae**
**Engl-Musk mallow**



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

மருத்துவ குணநலன்கள் கொண்ட காய் கறி மட்டுமல்ல சிறந்த மூலிகையாகும். வேகமாக வளரக் கூடியசெடியாகும். விதைத்து இரண்டு மாதங்களில் காய்க்க ஆரம்பித்து விடும். பல கிளைகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு இலைகளிலும் கொத்துக் கொத்தாக காய்கள் காய்க்கும். வருடம் முழுவதும் காய்கள் எடுத்துக் கொண்டே இருக்கலாம்.

இது ஒரு 4 அடி உயரம் வரை வளரக் கூடியது. காய்களை எடுத்துக் கொண்டே இருக்கலாம். காய்களை காய், கறியாக சமைத்து சாப்பிடலாம். காய்ந்தால் அதன் விதைகளை பொடித்து கோப்பிப் பொடியாகவும் பயன்படுத்தலாம்.

இதன் விதைகளை சித்த மருத்துவத்தில் தக்கோலம் என அழைப்பர்.உடலிற்கு வன்மையை கொடுக்கக் கூடியது.இரத்தசோகை உள்ளவர்கள் இதன் விதைகளை பொடித்து 1-2 கிராம் அளவு காலை, மாலை தேனில் அல்லது வெந்நீருடன் எடுக்கலாம்.

வாத நோய்க்குரிய பல மருந்துகளில் இதன் விதையானது அதாவது தக்கோலம் பயன்படுத்தப்படுகிறது. இதன் விதைகளை வாசனைத் திரவியமாகவும் பயன்படுத்தலாம். கஸ்தூரி வெண்டைக் காய்களை பச்சையாகவே சாப்பிடலாம்.

20 வகையான பாரம்பரிய வெண்டக்காய் ரகங்கள் உண்டு. எல்லாவற்றிலும் கஸ்தூரி வெண்டி நிறைய மருத்துவப் பண்புகளைக் கொண்டது. கஸ்தூரி வெண்டியில் அதிகளவு புரதச்சத்து உண்டு. பொதுவாக காய், கறிகள், பழங்களில் புரதச் சத்து அதிகளவு இருக்கமாட்டாது.

ஆனால் கஸ்தூரி வெண்டி விதிவிலக்காகும். நிறைய புரதச்சத்து உண்டு. இந்தப்



புரதத்தின் பெயர் லெஷின் இந்தப் புரதத்திற்கு தனித் தன்மை உண்டு. பொதுவாக மார்பக புற்றுநோயில் வளரக் கூடிய மெலனோமி கலங்களின் வளர்ச்சியையும், பெருக்கத்தையும் தடுக்கக் கூடியது. மார்பகப்புற்றுநோய் வராமல் தடுக்கும் தன்மை கஸ்தூரி வெண்டிக்காய்களுக்கு உண்டு. ஒரு பெண் கர்ப்பமுற்று இருக்கும் போது கர்ப்ப காலத்தில் சிசுவின் மூளை வளர்ச்சிக்கு தேவையான Folate சத்து இக் காய்களில் உண்டு. கர்ப்ப காலத்தில் முதல் 3 மாதங்களில் சிசுவின் மூளை வளர்ச்சி வேகமாக நடைபெறும்.

எனவே அக்காலத்தில் இவ் வெண்மைக் காய்களை தாராளமாக சாப்பிடலாம். கிட்டத்தட்ட ஒரு கப் வெட்டிய வெண்டைக் காய்களின் 15 % Folate சத்து கிடைக்கும். எனவே மற்றைய காய்கறிகள் வேறு உணவுகளுடன் சேர்த்து சாப்பிடலாம்.

கஸ்தூரி வெண்டைக் காயின் வழவழப்பு தன்மை காரணமாக ஜீரண மண்டலத்தில் உறிஞ்சப்படும் வேகம் சீராக இருப்பதனால் நீரிழிவு நோயாளிகளுக்கு இரத்தத்தில் சீனியின் அளவுகள் சரியாக பேணப்படும்.

எனவே நீரிழிவு நோயாளிகள் கஸ்தூரி வெண்டைக் காயை தாராளமாகப் பயன்படுத்தலாம். அதிகளவான கொழுப்பு உணவுகளை எடுப்பவர்கள் அல்லது இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவு அதிகரித்தவர்கள் இவ் கஸ்தூரி வெண்டைக் காய்களை சாப்பிடும் போது இதிலுள்ள வழவழப்பு தன்மையினால் உணவுடன் சேர்ந்து உண்டாகும் Mucilege கொலஸ்ரோல் உறிஞ்சப்படுவதைத் தடுக்கக் கூடியது. கெட்ட கொலஸ்ரோலை அதிகரிக்க விடாது. எனவே இருதயநோய் உள்ளவர்கள் கஸ்தூரி வெண்டைக் காய்களை தாராளமாக எடுக்கலாம். இவ் வெண்டைக் காய்களை எண்ணெயில் வதக்காமல் அவித்து சாப்பிடும் போது வழ வழப்புத் தன்மையும் சேர்த்துக் கிடைக்கும் எண்ணெயில் வதக்கும் போது வழவழப்புத் தன்மை நீங்கி விடும்.

பெரும்பாலும் பச்சையாகச் சாப்பிட்டாலும் சத்துக்களை பெற்றுக் கொள்ளலாம். இவ் கஸ்தூரி வெண்டியில் இருக்கும் சத்துக்கள் சிறுநீரகத்திற்கும் செல்லும் நரம்புகளை வலுப்படுத்தக் கூடியது. ஆனால் ஏற்கனவே சிறுநீரக பாதிப்பு உள்ளவர்கள் இவ் கஸ்தூரி வெண்டைக்காய்கள் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும்.

கஸ்தூரி வெண்டிக்காய் கரையக் கூடிய அதிகளவான நார்ச்சத்துக்களை கொண்டுள்ளது.

இதனால் நீரிழிவு, கொலஸ்ரோல் அதிகரித்த நிலைமை போன்றவற்றிற்கு மட்டுமல்லாது எமது ஜீரண மண்டலத்திற்கும் சிறந்தது.

செரிமானம், அகற்றுறிஞ்சலை சீராக பேணக் கூடியதாக இருக்கும். மலச்சிக்கலையும் நீக்கக் கூடியது.

இதைவிட கஸ்தூரி வெண்டைக்காய்களில் உயிர்ச்சத்து K மற்றும் கல்சியம் சத்துக்கள் அதிகமாக இருப்பதனால் என்புத் தேய்மானத்தை தடுக்கக் கூடியதாக இருக்கும்.

கஸ்தூரி வெண்டியில் இருக்கும் நார்ச்சத்தானது நீரிழிவு நோயாளிகளுக்கு சர்க்கரை உயர்த்தும் திறனை அதிகரிக்கவிடாது.

எனவே சர்க்கரையின் அளவு சீராக இருக்கும் இக் காயில் இருக்கும் Pre-Biotics குடலில் நல்ல பக்ரீரியாக்களில் வளர்ச்சியை ஊக்குவிக்கும். இதனால் செரிமான பிரச்சினைகள் ஏற்படாது. ஜீரண மண்டலம் சீராக செயலாற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த ஆண்டில்

# 207 மில்லியன் ரூபா அபராதம் விதிப்பு

## நுகர்வோர் அதிகார சபை தெரிவிப்பு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டில் நுகர்வோர் விவகார அதிகாரசபை முன்னெடுத்த சோதனைகளுக்கமைய, 23, 953 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தங்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் நீதவான் நீதிமன்றங்களால் 207 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் கடந்த ஆண்டில் 24,761 சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதில் அதிக கட்டணம் வசூலித்தல், தயாரிப்பு தகவல்களை தவறாக சித்தரித்தல், விலைகளை காட்சிப்படுத்த தவறியமை, மின் சாதனங்களுக்கு உத்தரவாதங்களை வழங்காதமை மற்றும் நியாயமற்ற சூழ்நிலையில் பொருட்களை விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றங்கள் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி-8)

## நயினை தவத்திரு முத்துக்குமாரசுவாமிகளின் 76 ஆவது குருபூசை தினம் இன்று

ஈழத்துச் சித்தர் வரிசையில் ஞான ஊற்றாக திகழ்ந்தவர் தான் நயினாதீவுச் சாமியார் என்று போற்றி வழிபடப்பெற்றவர் முத்துக்குமார சுவாமிகள். இவர் இளமையில் ஞானம் கைவரப்பெற்றவர். நயினாதீவில் வாழ்ந்த ஆறுமுகம் பார்வதி தம்பதியருக்கு ஆறாவது மகனாக 1897 ஆம் ஆண்டு அவதரித்தார். இவருக்குப் பெற்றோர் வைத்த பெயர் முத்துக்குமாரு என்பதாகும். அன்று நயினாதீவிலிருந்த தில்லையம்பலம் பாடசாலையில் கல்வி பயின்றார்.

சிறுவயதில் நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாளின் திருவருளால் கவிபாடும் திறமை பெற்றார். சிறுவயதில் கொழும்பில் பொறளையில் அவரின் தமையனாரின் கடையில் வேலை செய்து வந்தார். அப்போது 1915 முஸ்லிம்-சிங்கள சமூகங்களுக்கிடையில் கலவரம் மூண்ட காரணத்தினால் அக்கோரக் காட்சியை கண்ட முத்துக்குமாரு உள்ளம் வெதும்பி வேதனைப்பட்டார். இக்காலத்தில் இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த ஒரு பெரியாரை இவர் சந்திக்க நேரிட்டது. அப்பெரியார் முத்துக்குமாரு இருந்த இடத்தில் சிலநாட்கள் தங்கி இருந்தார்.

இவர்கள் இருவருக்கும் இறுக்கமான தொரு ஆன்மீகத்தொடர்பு ஏற்படலாயிற்று. அந்தப் பெரியாரும் முத்துக்குமாருவும் ஒரு நாள் கதிர்காமத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்கள். அங்கு கதிரமலைக்கு செல்லும் வழியில் இரவு ஒரு மரத்தடியில் இருவரும் தங்க நேரிட்டது. அந்த நிசப்தமான இடத்தில் நிசப்தமான வேளையில் முத்துக்குமாருக்கு தீட்சையும் உபதேசமும் கொடுக்கப்பட்டது. குருவும் சீடரும் மறுநாள் கதிர்காமம் சென்று வழிபட்டு கொழும்பு திரும்பினர்.

முத்துக்குமாருவை ஆட்கொள்ள வந்த ஞானகுரு, வந்த வேலை முடிந்தது என்ற நிலையில் ஒரு நாள் காலை



வெளியில் சென்று திரும்பவில்லை. முத்துக்குமாரரோ தம்மை ஆட்கொண்ட குருவை எங்கேயும் தேடியும் காணாமல் பித்தர் போல் ஆனார். சித்தத்தை சிவன் பால் வைத்த முத்துக்குமார் கடை வேலைகளில் நாட்டம் காட்டாமல் இருப்பதைக் கண்ட தமையனார் கண்டிக்கத் தொடங்கினர். ஒருநாள் கிறுக்கல் கவிதை ஒன்றை எழுதி வைத்து விட்டு யாருக்குமே கூறாமல் கடையை விட்டு தனது குருநாதரைத் தேடி இந்தியா சென்று அவரை கண்டறிந்தார்.

சுவாமிகள் நயினாதீவிற்கு 1933 ஆம் ஆண்டு வருகை தந்து நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் வடமேற்கு மூலையில் உள்ள அன்றைய அன்னம்பிள்ளை மடத்தில் தங்கி நிட்டையில் அமர்ந்து தியானத்தில் இருந்தார் சுவாமிகள் தியான நிட்டையில் அன்று இருந்த காரணத்தால் தான் இன்று தியான மண்டபம் என்று சொல்லப்படுகின்றது.

சுவாமிகள் 1949 ஆம் ஆண்டு தை மாதம் 26 ஆம் திகதி பிரதோஷ காலமும் பூராட நட்சத்திரமும் பொருந்திய நடு இரவில் சுவாமிகளின் ஆத்ம ஜோதி சிவப் பேரொளியில் ஒன்றியது.

**கலாபூஷணம், நயினை,**
**நா.கோபாலகிருஷ்ணன்.**

## சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதனப் பெயர் மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் 01. கார்த்திகேசு வீதி. 70/9 (74/9 பழையது) எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் வீரபாகு இராசம்மா. செல்லையா சுந்தரம் என்னும் பெயரில் ஆதனவரிப் பெயரேட்டில் பதியப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை மீசாலை தெற்கைச் சேர்ந்த வீரபாகு கைம்பெண் இராசம்மாவும் வீரபாகு கணேசமூர்த்தி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு வே.கனகசபை அவர்கள் மூலம் 17850 இலக்க 25.10.1966 ஆம் திகதியில் நிறைவேற்றிய நன்கொடை உறுதியில் இவ்வாதனம் எங்களில் 1ஆம் பெயர்வழிகாரிக்கு மகன் முறையும் 2 ஆம் பெயர்வழிகாரனுக்கு சகோதரன் முறையுமான அவ்வூர் செல்லப்பா மயில்வாகனத்துக்கு அழிக்கப்படாத நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

பின்னர் மீசாலை தெற்கு செல்லப்பா மயில்வாகனமும் பெண் இளையபிள்ளையும் அவருடைய மகள் அவ்வூர் சுந்தரம் பெண் பொன்னம்மாவுக்கு பிரசித்த நொத்தாரிசு இ.இராசா அவர்கள் மூலம் 30.03.1975 ஆம் திகதியில் நிறைவேற்றிய 1544 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளனர்.

மேலும் மீசாலை தெற்கு இளையதம்பி இராசையாவும் பெண் நாகேஸ்வரியும் அவ்வூர் செல்லையா சுந்தரம் பெண் பொன்னம்மாவுக்கு பிரசித்த நொத்தாரிசு இ.இராசா அவர்கள் மூலம் 05.04.1978 ஆம் திகதியில் நிறைவேற்றிய 2446 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளனர்.
பின்னர் மீசாலை தெற்கு செல்லையா சுந்தரம் பெண் பொன்னம்மா பிரசித்த நொத்தாரிசு இ.இராசா அவர்கள் மூலம் 01.07.1985 ஆம் திகதியில் நிறைவேற்றிய 5031 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் கட்டுவன் தெல்லிப்பளை சின்னத்தம்பி துரைராசாவுக்கு இவ்வாதனத்தை வழங்கியுள்ளார்.

பின்னர் தெல்லிப்பளை கட்டுவன் சின்னத்தம்பி துரைராசா மீசாலை தெற்கு சின்னத்தம்பி சற்குணநாதனுக்கு பிரசித்த நொத்தாரிசு சி.சுரேந்திரன் அவர்கள் மூலம் 11.08.1986 ஆம் திகதியில் நிறைவேற்றிய 3565 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளார்.

பின்னர் மீசாலை தெற்கு சின்னத்தம்பி சற்குணநாதன் பெண் இரத்தினபூபதி அவ்வூர் செல்லையா சுந்தரம் மகன் உதயசந்திரனுக்கு பிரசித்த நொத்தாரிசு இ.இராசா அவர்கள் மூலம் 11.07.1993 ஆம் திகதியில் நிறைவேற்றிய 7530 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளார்.

பின்னர் மீசாலை மேற்கு தற்காலம் பன்சல வீதி, ஹற்றனைச் சேர்ந்த சுந்தரம் உதயச்சந்திரனால் மீசாலை மேற்கு முருகேசு புண்ணியமூர்த்தி பெண் யோகாம்பிகைக்கு பிரசித்த நொத்தாரிசு ப.குகனேஸ்வரன் அவர்கள் மூலம் 14.09.2020 ஆம் திகதியில் நிறைவேற்றிய 4180 ஆம் இலக்கஅறுதி உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளார்.

வேறொரு ஆதனம் மீசாலை வடக்கு சிவசம்பு கணேசன் என்பவரால் மீசாலை தெற்கு முருகேசு புண்ணியமூர்த்தி மனைவி யோகாம்பிகைக்கு பிரசித்த நொத்தாரிசு இ.இராசா அவர்கள் மூலம் 27.01.1975 ஆம் திகதியில் நிறைவேற்றிய 1495 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளார்.

பின்னர் உருத்திரபுரம் சிவநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த கணேசலிங்கம் கைம்பெண் தங்கமுத்துவால் மீசாலை மேற்கு முருகேசு புண்ணியமூர்த்தி பெண் யோகாம்பிகைக்கு பிரசித்த நொத்தாரிசு ப.குகனேஸ்வரன் அவர்கள் மூலம் 31.01.2021 ஆம் திகதியில் நிறைவேற்றிய 4238 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் பாதை உரித்து வந்தடைந்துள்ளது.

பின்னர் மீசாலை மேற்கு. கார்த்திகேசு வீதி முருகேசு புண்ணியமூர்த்தியும் பெண் யோகாம்பிகையும் பிரசித்த நொத்தாரிஸ் செல்வி சின்னத்துரை சிவவாணி அவர்கள் மூலம் 20.08.2023 ஆம் திகதியில் 1563 ஆம் இலக்க பாதை உரித்து பிரகடன உறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

பின்னர் மீசாலை மேற்கு தற்போது பன்சல வீதி, ஹட்டன் சுந்தரம் உதயச்சந்திரனால் பிரசித்த நொத்தாரிசு செந்தில்ராஜ் ஆர்த்திகா அவர்கள் மூலம் 21.08.2023 ஆம் திகதிய 347 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியில் கிணற்றடி வளவு நி.ப 8 குளி 1½யில் சொரியலான ¼ பங்கிற்கு அதாவது மேற்குறித்த 7988/S ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்ட நிலப்பரப்பு 2 குளி 00.49 விஸ்தீரணமுடைய ஆதனத்திற்கு முறையான உறுதி ஏதும் இல்லாத காரணத்தினால் இவ் வெளிப்படுத்தல் உறுதியை நிறைவேற்றி உள்ளார்.

பின்னர் பன்சல வீதி, ஹட்டன் தற்போது மீசாலை மேற்கு சுந்தரம் உதயச்சந்திரன் பிரசித்த நொத்தாரிசு செந்தில்ராஜ் ஆர்த்திகா அவர்கள் மூலம் 15.06.2023 ஆம் திகதியில் நிறைவேற்றிய 388 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் கார்த்திகேசு வீதி. மீசாலை மேற்கைச் சேர்ந்த முருகேசு புண்ணியமூர்த்திக்கு வழங்கியுள்ளார்.

01). வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று மீசாலை இறை தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவு சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட J/319 இலக்க கிராம அலுவலர் பிரிவு "கிணற்றடி வளவு" நிலப்பரப்பு 18 மேற்குப் பக்க அரைவாசிக்கு 9 இது ஆட்சிப்படி நிலப்பரப்பு 8 குளி 1 1/2 எட்டு பரப்பும் ஒன்றரை குளியும் இதில் 3/4 பங்குக்கு வடக்கு பக்கமாக நிந்தமான நிலபரப்பு 6 குளி 0.37 ஆறு பரப்பும் 0.37 குளியும். இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.கனகசபை அவர்களால் அளந்து வரையப்பட்ட 23.08.2020 திகதிய 7988/S இலக்க நில அளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 09 குளி 07. இதற்கெல்லை கிழக்கு கார்த்திகேசு நடராசலிங்கத்துக்குரிய ஆதனம், வடக்கு இக்கொள்வனவுகாரருக்குரிய ஆதனம். மேற்கு சின்னையா நல்லையாவுக்குரிய ஆதனம். தெற்கு இதன் மிகுதி ஆதனம். இவ்வெல்லைக்குள்ளடங்கிய காணியும் பயிர்களும் அதைச்சேர்ந்தவைகள் அனைத்துமடங்கலும்.
02). வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி பிரதேச செயலகம் சாவகச்சேரி நகரசபை கிராம அலுவலர் பிரிவு மீசாலை மேற்கு பிரிவு J/319 மீசாலை இறை "கிணற்றடி வளவு" நிலப்பரப்பு இரண்டும் குளி 00.49 சைபர் தசம் நான்கு ஒன்பதும் (இதன் பதிவு: F1030/07) இது தற்போது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.கனகசபை அவர்களால் 23.08.2020 ஆம் திகதி 7988/S இலக்கத்தில் அளந்து தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்டுள்ளது. நிலம். செய்பயிர் வான்பயிர்களும் மற்றும் அதற்குரியவைகளும் இதற்கெல்லை கிழக்கு கார்த்திகேசு நடராசலிங்கத்துக்குரிய ஆதனம் வடக்கு இக்கொள்வனவுகாரனுக்கும் முருகேசு புண்ணியமுர்த்தி பெண் யோகாம்பிகைக்குமுரிய ஆதனம். தெற்கு கணேஸ் மகள் சத்யாவுக்கும் நடராசா குலசேகரத்திற்கும் உரிய ஆதனங்கள். மேற்கு சின்னையா நல்லையாவுக்குரிய ஆதனம். இதடங்கலும்.
இவ்விரு ஆதனங்கள் சேர்ந்து தற்போது பிரசித்த நில அளவையாளர் K.கனகசபை அவர்களால் அளந்து வரையப்பட்ட 2024.08.27 ஆம் திகதிய 9434 ஆம் இலக்க நில அளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 9 குளி 12.18 ஆகும்.

தற்போது முருகேசு புண்ணியமூர்த்தி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ அல்லது தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களுடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளராக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செயலாளர்,
நகராட்சிமன்றம் சாவகச்சேரி (3211) 27.01.2025


# மணிவிழா வாழ்த்து




திரு.
## கு.ரவிச்சந்திரன்
அதிபர் யா/அச்சுவேலி மத்திய கல்லூரி

24.01.2025 இல் அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெற்று 25.01.2025 மணிவிழா கண்ட எமது கோப்பாய் கல்விக் கோட்ட சிரேஷ்ட அதிபர் திரு.கு.ரவிச்சந்திரன் அவர்களுக்கு எமது மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

வாழ்த்துவோர் :
கோட்டக்கல்வி ... 
கோப்பாய்க் கோட்டம்
(c-2138)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்


# 76 ஆவது இந்தியக் குடியரசு தினம்

# போர் நினைவுச்சின்னத்தில் பிரதமர் மோடி மரியாதை

(டில்லி)

இந்திய நாட்டின் 76 ஆவது குடியரசு தின விழா நாடு முழுக்க கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஆளுநர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்தனர். மேலும் சிறப்பு அணிவகுப்புகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இந்த நிலையில் குடியரசு தினத்தையொட்டி பிரதமர் நரேந்திர மோடி டில்லியில் உள்ள தேசிய போர் நினைவு சின்னத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். போர் நினைவு சின்னத்தில் பிரதமர் மோடியை பாதுகாப்பு படையினர் மற்றும் பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வரவேற்றனர். (நி-8)



## 4 பிணைக் கைதிகளை விடுவித்த ஹமாஸ்



(ஜெருசலேம்)

இஸ்ரேல் மற்றும் காசாவின் ஹமாஸ் அமைப்பு இடையிலான போர் 15 மாதத்துக்குப் பிறகு முடிவுக்கு வந்துள்ளது. கடந்த 2023 ஆம் ஆண்டு இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தி 250இற்கும் மேற்பட்டோரை பிணைக் கைதிகளாகப் பிடித்துச்சென்றனர்.

அதன்பின் தற்காலிக போர் நிறுத்தத்தின்போது 120 இற்கும் மேற்பட்ட பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். ஹமாஸ் அமைப்பினரிடம் இன்னும் 94 பிணைக் கைதிகள் உள்ளனர். 34 பேர் உயிரிழந்துவிட்டனர்.

கட்டார், எகிப்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் மத்தியஸ்தத்தால் இரு தரப்புக்கும் இடையே ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் சமீபத்தில் அமுலுக்கு வந்தது.

பிணைக்கைதிகளான ரோமி கொனின் (24), ஏமி டமாரி (28), டோரன் ஸ்டான்பிரசர் (31) ஆகிய 3 பேரை ஹமாஸ் அமைப்பு சமீபத்தில் விடுதலை செய்தது. இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் 6 வாரங்களுக்கு நடைமுறையில் இருக்கும்.

இந்நிலையில் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் இரண்டாவது கட்டமாக 4 இளம் இஸ்ரேல் பெண் பிணைக் கைதிகளை ஹமாஸ் விடுவித்துள்ளது. விடுவிக்கப்பட்ட கரினா அரிவ், டேனிலா கில்போவா, நாமா லெவி மற்றும் லிரி அல்பாக் ஆகிய 4 பெண்கள் காசாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பின்னர் அவர்கள் இஸ்ரேலிய பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஈடாக 200 பாலஸ்தீனிய பிணை கைதிகளை இஸ்ரேல் விடுவிக்க உள்ளது. (நி-8)

## ஹமாஸ் அமைப்பில் புதிதாக 15000 உறுப்பினர்கள்

### அமெரிக்க புலனாய்வு தகவல்

(வோஷிங்டன்)

இஸ்ரேலுடனான யுத்தம் ஆரம்பித்த பின்னர் பாலஸ்தீனிய போராளி அமைப்பான ஹமாஸ் புதிதாக 15000 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களை இணைத்துக்கொண்டுளது என அமெரிக்க புலனாய்வு பிரிவினர் தெரிவித்ததாக அமெரிக்க காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் மூலம் ஈரான் ஆதரவு அமைப்பு இஸ்ரேலிற்கு தொடர்ந்தும் அச்சுறுத்தலாக விளங்கலாம் என அமெரிக்க புலனாய்வு பிரிவுகள் தெரிவித்துள்ளன.

15000 ஹமாஸ் உறுப்பினர்கள் இஸ்ரேலுடனான மோதலின் போது கொல்லப்பட்டனர் என அமெரிக்க புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜோபைடன் நிர்வாகத்தின் இறுதிநாட்களில் கிடைத்த தகவல்கள் உட்பட பல தகவல்கள் குறித்து அமெரிக்க புலனாய்வு வட்டாரங்கள் காங்கிரஸிற்கு பல தகவல்களை வழங்கியுள்ளன.

ஹமாஸ் புதிய உறுப்பினர்களை இணைத்துக் கொள்வதில் வெற்றி பெற்றுள்ளது புதிதாக இணைக்கப்பட்டவர்களில் பலர் இளையவர்கள், என தெரிவித்துள்ள அமெரிக்க புலனாய்வு வட்டாரங்கள் புதியவர்களிற்கு இன்னமும் பயிற்சிகள் வழங்கப்படவில்லை ஹமாஸ் அவர்களை சாதாரண பாதுகாப்பு நடவடிக்கைகளிற்கு பயன்படுத்துகின்றது என குறிப்பிட்டுள்ளனர்.

காசாவில் தான் இழந்த அதேயளவு உறுப்பினர்களை ஹமாஸ் மீண்டும் சேர்த்துக்கொண்டுளது என அமெரிக்காவின் முன் னாள் இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கென் ஜனவரி 14 ஆம் திகதி தெரிவித்திருந்தார்.

இது நீடித்த கிளர்ச்சி நிரந்தர போரை உருவாக்கும் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இஸ்ரேல் தனது இராணுவ நடவடிக்கையை பூர்த்தி செய்த பின்னர் படைகளை மீளபெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஹமாஸ் மீள் எழுச்சி பெறுகின்றது என அன்டனி பிளிங்கென் தெரிவித்திருந்தார். (நி-8)

# உல...

# நிதியு...

(வோஷிங்டன்...

வெளிநாட்டு ...

எதிர்காலத்தி...

வாசியாக கு...

டொனால்ட் ட்ரம்...

பல நாடுகள் ...

உருவாகியுள்ள...

அமெரிக்காவின் புதிய இராஜாங்க செயலாளர் மைக்ரூபியோ இதுகுறித்த அறிவிப்பை அமெரிக்காவின் அனைத்து வெளிநாட்டு தூதரகங்களிற்கும் அனுப்பிவைத்துள்ளார்.

இதன் காரணமாக வெளிநாடுகளில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களிற்கு யுஎஸ்எயிட் அமைப்பும் அமெரிக்க இராஜாங்க திணைக்களமும் வழங்கிவந்த நிதி நிறுத்தப்படும்

## சூடான் மருத்து...

## ட்ரோன் தா...

❖ 67 பேர் உயி...

❖ சுமார் 10 பே...



(சூடான்)

சூடான் மருத்துவமனை மீது ட்ரோன்களை வீசி தாக்குதல் நடத்தியதில் 67 பேர் பரிதாபமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கை நாடுகளுக்கான ...உதவியை நிறுத்திய ட்ரம்ப்!

(...டன்)

**...டு உதவிகளை நிறுத்திவைப்பதற்கும் ...தில் வெளிநாட்டு உதவிகளை அரை ...குறைப்பதற்கும் அமெரிக்க ஜனாதிபதி ...ரம்ப் தீர்மானித்துள்ளதால் இலங்கை உட்பட ...் நெருக்கடியை எதிர்கொள்ளும் சூழ்நிலை ...ள்ளது.**



நிலை எழுந்துள்ளது.

அமெரிக்கா வெளிநாடுகளிற்கு வழங்கும் வெளிநாட்டு உதவி திட்டங்களை 90 நாட்களிற்கு நிறுத்திவைக்குமாறு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டிருந்தார்.

இதனை அமெரிக்கா வெளிநாடுகளிற்கு வழங்கும் நிதி உதவி அமெரிக்கா ஜனாதிபதியின் வெளிவிவகார கொள்கைக்கு இசைவான விதத்தில் காணப்படுகின்றதா என ஆய்வினை மேற்கொள்ளுமாறு அமெரிக்க இராஜாங்க திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

1956 ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா இலங்கைக்கு 2 பில்லியன் டொலர் உதவிகளை வழங்கியுள்ளது என இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிதிஉதவி சந்தையை அடிப்படையாக கொண்ட பொருளாதார வளர்ச்சியை முன்னெடுப்பதற்கும், சுற்றுச்சுழல் பேண்தகுதன்மை மற்றும் மீள் எழுச்சி தன்மை ஆகியவற்றை வளர்ப்பது. நல்லாட்சியை ஊக்குவிப்பது போன்றவற்றிற்கு அமெரிக்கா இந்த நிதியுதவியை வழங்குகின்றது.

இதேவேளை அமெரிக்காவின் புதிய இராஜாங்க செயலாளர் இஸ்ரேலிற்கான இராணுவ உதவிகளை நிறுத்துவதற்கான உத்தரவை பிறப்பிக்கவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி-8)

## ...துவமனை மீது ...தாக்குதல் ...யிரிழப்பு




கொல்லப்பட்டனர்.

ஆபிரிக்க நாடான சூடானில் இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. அதனை எதிர்த்து துணை இராணுவத்தினர் போராடி வருகிறார்கள். இதனால் இருதரப்புக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது.

இந்த உள்நாட்டுக் கலவரத்தில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். மேலும் பல்லாயிரக்கணக்கானோர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இந்நிலையில் சூடானின் டார்பூர் பகுதியில் உள்ள எல்-பஷாரில் செயற்பட்டு வந்த மருத்துவமனை ஒன்றில் ஆளில்லா விமானம் கடந்த வெள்ளிக்கிழமை தாக்குதல் நடத்தியது.

இந்த தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 67 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர். மேலும் 10 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-8)

## தாய்லாந்தில் காற்றின் தரம் மோசம் 352 பாடசாலைகளுக்கு பூட்டு

(வியட்நாம்)

உலகின் சமீபத்திய மிகப்பெரும் பிரச்சினையாக காலநிலை மாற்றம் உருவெடுத்துள்ளது. இதன் விளைவாக உலகம் வெப்பமயமாதல், கடல் நீர் மட்டம் உயர்வு, அதீத கனமழை மற்றும் வறட்சி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன.


மேலும் ஆங்காங்கே காட்டுத்தீயும் எரிந்து வருவதால் காற்று மாசுபாடு பலமடங்கு அதிகரித்துள்ளது. அந்தவகையில் தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் காற்றின் தரம் மிகவும் மோசமடைந்தது.

இதற்கிடையே ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையின்படி உலகின் காற்று மாசடைந்த நகரங்கள் பட்டியலில் தாய்லாந்து தலைநகர் பாங்காக் 7 ஆவது இடத்தை பிடித்தது. அண்டை நாடான வியட்நாம், கம்போடியாவில் உள்ள நகரங்களும் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளன. இதன் காரணமாக அங்கு வசிப்பவர்கள் மோசமான காற்றை சுவாசிப்பதால் நுரையீரல் புற்று நோய் போன்ற பல்வேறு நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது. இதனை கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன்படி காற்று மாசுபாட்டுக்கு முக்கிய காரணமாக கருதப்படும் விவசாய கழிவுகளை எரிக்க தாய்லாந்தில் தடை விதிக்கப்பட்டு உள்ளது. இதனை மீறுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என உள்துறை அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார். அதேபோல் மாணவர்களின் நலன் கருதி தலைநகர் பாங்காக்கில் 352 பாடசாலைகள் மூடப்பட்டு உள்ளன. மேலும் தங்களது ஊழியர்களை வீட்டில் இருந்தே பணிபுரிய அனுமதிக்கும்படி தனியார் நிறுவனங்களுக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

அதேபோல் தலைநகர் பாங்காக்கில் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. இதனைத் தொடர்ந்து காற்று மாசுபாட்டை குறைக்க அனைவரும் பொதுப்போக்குவரத்தை பயன்படுத்துமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது. இதற்காக அடுத்த ஒரு வாரத்துக்கு பஸ், ரயில் போன்றவற்றில் இலவசமாக பயணம் செய்ய போக்குவரத்து அமைச்சகம் அனுமதி வழங்கி உள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகர் அஜித்குமாருக்கு பத்மபூஷண் விருது



(டில்லி)

இந்திய திரைப்பட நடிகர் அஜித் குமாருக்கு இந்திய அரசின் மிக உயரிய விருதுகளில் ஒன்றான பத்மபூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளமை அவரது ரசிகர்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் மிக உயரிய விருதுகளில் ஒன்றான பத்ம விருதுகள் ஆண்டு தோறும் குடியரசு தினத்தையொட்டி அறிவிக்கப்படுகின்றன.

அந்த வகையில் இவ்வருடமும் 7 பேருக்கு பத்மவிபூஷண் விருதும், 19 பேருக்கு பத்மபூஷண் விருதும், 113 பேருக்கு பத்மஸ்ரீ விருதும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இவற்றில் நடிகர் அஜித்குமார், நல்லி குப்புசாமி, நடிகை சோபனா ஆகியோருக்கு பத்ம பூஷண் விருதும், அஸ்வின், குருவாயூர் துரை, தாமோதரன், லட்சுமிபதி ராமசுப்பையர், ஸ்ரீநிவாஸ், புரிசை கண்ணப்பசம்பந்தம், சந்திர மோகன், ராதாகிருஷ்ணன் தேவசேனாதிபதி, ஸ்ரீனி விஸ்வநாதன், வேலு ஆசான் ஆகியோருக்கு 'பத்மஸ்ரீ' விருதும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 420 | 350 | 400 | 600 |
| உருளைக்கிழங்கு | 180 | 160 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1200 | 900 | 800 | 800 |
| தக்காளி | 350 | 400 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 250 | 200 | 200 |
| கோவா | 300 | 200 | 250 | 300 |
| கரட் | 250 | 380 | 350 | 450 |
| பூசணி | 120 | 120 | 120 | 200 |
| புடோல் | 150 | 200 | 120 | 200 |
| வாழைக்காய் | 150 | 140 | 150 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 350 | 700 |
| பெரிய வெங்காயம் | 280 | 280 | 250 | 300 |
| பாகற்காய் | 600 | 600 | 400 | 600 |
| வெண்டக்காய் | 200 | 350 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 120 | 200 |
| பயற்றங்காய் | 600 | 600 | 700 | 800 |
| லீக்ஸ் | 350 | 380 | 300 | 400 |
| பீற்றூட் | 600 | 400 | 400 | 450 |
| கறிமிளகாய் | 1400 | 700 | 600 | 800 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 2000 | 2400 |
| போஞ்சி | 400 | 300 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 400 | 500 |
| கீரை – 1 பிடி | 120 | 100 | 120 | 200 |
| தேசிக்காய் | 300 | 250 | 250 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250 | 200 | 180-250 |
| இராசவள்ளி | 500 | 700 | 400 | 800 |
| வெங்காயப்பூ | 450 | 350 | 400 | 600 |
| முள்ளங்கி | 120 | 120 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 120 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 60 | 100 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 200 |

# இன்று ஒரு தகவல் 309



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## எழுத்து சாத்திரம்

ஒருவர் எழுதிற எழுத்தைப் பார்த்துவிட்டு, அந்த ஆள் எப்படிப்பட்டவனா இருப்பான் என்கிறதை யூகிக்க முடியுமா? முடியும் என்று சொல்கிறார்கள் சில பேர். அது தான் எழுத்து சாஸ்திரம். இப்பவும் மேல் நாடுகளிலே சில பத்திரிகை விளம்பரங்களைப் பார்த்தால். இந்த வேலைக்கு விண்ணப்பம் போடுகிறவர்கள் தங்களுடைய சொந்தக் கையெழுத்திலே மனுவை எழுதி அனுப்ப வேண்டும் என்று இருக்குமாம். இது எதற்கு என்று நினைக்கிறீர்கள்? பல பெரிய கம்பெனிக்கு எழுத்து சாஸ்திரத்திலே நம்பிக்கை இருக்கிறது தான் இதற்குக் காரணம்.

இன்றைக்கும் லண்டனிலே உள்ள பல பெரிய கம்பெனிகள் வேலைக்கு ஆள் எடுப்பதற்கு முன்னால் சாஸ்திர நிபுணர்களைக் கூப்பிட்டு மனுதாரர்களுடைய கையெழுத்தைக் காட்டுவது உண்டாம். எழுத்துக்கு மதிப்பெண் போடச் சொல்லுவார்களாம். நிறைய விண்ணப்பம் வருகிறபோது அதை வடிகட்டுவதற்கும் இந்த முறையை உபயோகப்படுத்துவது உண்டாம்.

பிரிட்டன்,பிரான்ஸ், ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, செக்கோஸ்லாவாகியா, இஸ்ரேல் இங்கேயெல்லாம் இந்தக் கலையிலே தேர்ச்சி பெற்ற நிபணர்களுக்கு ஏகப்பட்ட கிராக்கியாம். அவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்குதாம். ஒரு ஊழியர் நேர்மையானவரா இல்லையா, பணம் புழங்கிற இடத்திலே அவருக்கு வேலை கொடுக்கலாமா கூடாதா, விசுவாசமான ஊழியரா, பொய் சொல்லுவாரா போன்றவற்றையெல்லாம் எழுத்தைப் பார்த்து முடிவு செய்கிறார்களாம்.

இத்தாலியிலே 17 ஆவது நூற்றாண்டிலே இந்தக் கலை ஆரம்பமாகி இருக்கிறது. 1871 வரைக்கும் இது ஒன்றும் அவ்வளவாக பிரபலமாகவில்லையாம். பிரெஞ்சுப் பாதிரியார் (ஹிபோலைட் மிஷாந்த்) ஒருவர் 1871 இலே பிரெஞ்சு எழுத்து சாஸ்திர சங்கத்தை நிறுவினாராம். அதற்குப் பிறகு இது கொஞ்சம் கொஞ்சமாக பரவ ஆரம்பித்திருக்கிறது. இன்று உலகத்திலேயே மிகப் பெரிய எழுத்துக்கலைக் கழகம் இஸ்ரேல் டெல் அவிவ் நகரத்திலே இருக்கு. அதனுடைய கிளை லண்டனிலே இருக்காம். இஸ்ரேலிலே சில சமயம் நீதிமன்றங்கள் கூட எழுத்து சாஸ்திர அறிஞர்களின் அறிக்கையை ஏற்றுக் கொள்கிறார்களாம். குற்றவாளிகள் உண்மையிலேயே குற்றம் இழைக்கக்கூடியவர் தானா என்பதை அவர் எழுதிய எழுத்தின் வடிவத்தை வைத்துக் கண்டுபிடித்து விடுகிறார்களாம் சேர்.

எழுத்து சாஸ்திரம் சம்பந்தமாக கடந்த 200 வருடங்களிலே ஏராளமான நூல்கள் வந்திருக்குதாம். சில பல்கலைக் கழகங்களிலே இதைப் பாடமாக கூட வைத்திருக்கிறார்களாம். இந்தக் கலையை நூற்றுக்கு நூறு துல்லியமானது என்று சொல்ல முடியாது. இதை விஞ்ஞான ரீதியிலே நிரூபிக்க முறையான ஆராய்ச்சிகள் எதுவும் நடத்தப்படவில்லை.ஆனாலும் ஒருவர் எழுதுகிற எழுத்தின் வடிவத்தை வைத்து அவருடைய மனநிலையை ஓரளவுக்குப் புரிந்து கொள்ள முடியும் என்பது உண்மை. உளவியல் நிபுணர்கள் இதை ஒப்புக் கொள்கிறார்கள்.

ஒருத்தருடைய தனித்துவத்தைக் கண்டுபிடிக்க இது மிகவும் உதவியாக அமையும்.

கோடு போடாத வெள்ளைத்தாளிலே ஒரு பேனாவாலே ஒரு 20 வரி எழுதிக் கொடுத்தால் போதும். நீங்கள் எப்படிப்பட்டவர் என்று சொல்கிற நிபுணர்கள் பலபேர் இருக்கிறார்கள்.

ஆங்கில எழுத்துக்களை அடிப்படையாக வைத்து விளக்கம் கொடுக்கிறார்களாம். இருந்தாலும் பிறமொழிகளிலே எழுதுகிறவர்களின் குணநலனைக் கண்டுபிடிக்கிறதற்கும் பொதுவான விதிமுறைகள் இருக்குதாம்.

ஒருத்தர் பெரிதாக இடைவெளி விட்டு எழுதினால் அவர் பரந்த நோக்கம் உள்ளவர். சிறிதாக நெருக்கமாக எழுதினால் ஒழுக்கமும் கட்டுப்பாடும் உள்ளவர். ஒரு தாளிலே இரு பக்கமும் மார்ஜின் விட்டு எழுதுகிறவர்கள் கலைநோக்கு உள்ளவர்களாகவும் எதிலேயும் பட்டும்படாமலும் இருக்கிற சுபாவம் உள்ளவர்களாகவும் இருப்பார்களாம். ஆங்கில எழுத்துகளிலே L,T, F மாதிரியான எழுத்துக்களை அளவீக்கு அதிகமாக மேல்புறம் நீட்டி எழுதுகிறவர்கள் குறிக்கோள் உள்ளவர்களாம்.

சில வைத்தியர்கள் மருந்துச் சீட்டு எழுதிக் கொடுக்கிறார்கள். அதை உங்களாலே படிக்க முடியுமா? அதைப் படிப்பதற்கு தனி சாமர்த்தியம் வேணும். சிலபேராலே தான் அது முடியும். அவர் எழுதிக் கொடுக்கிற சீட்டை கம்பவுண்டரிடம் கொண்டுபோய் கொடுங்கள். அவர் அதை சரியாகப் படித்து பாாத்துவிட்டு மருந்து கலந்து கொடுத்துவிடுவார்.

அந்த எழுத்து நமக்குப் புரியாது. ஒரு ஆள் கையிலே ஒரு விலாச சீட்டை வைத்துக் கொண்டு வீடு எங்கே இருக்கிறது என்று தேடிக் கொண்டு இருந்தான். அந்தச் சீட்டிலே விலாசம் எழுதிக் கொடுத்தவர் ஏதோ ஒரு அவசரத்திலே கிறுக்கிக் கொடுத்திருக்கிறார். ஒன்றும் புரியவில்லை.

வழியிலே போறவர்களிடமெல்லாம் சீட்டைக் காட்டி விசாரிக்கிறார். வாங்கிப் பார்ப்பவர்கள் எல்லாம். எழுத்துப் புரியாமல் போய் விடுகிறார்கள். இந்த ஆள் யோசித்தார். அங்கேயும் இங்கேயும் பார்த்தார். ஒரு சின்ன வைத்தியசாலை கண்ணிலே பட்டது. புத்திசாலித்தனமாக நேராக அங்கே போனான். கம்பவுண்டரைத் தேடிப் பிடித்தான். டாக்டர் எழுத்தையே புரிந்து வைத்திருக்கிறவராச்சே கம்பவுண்டர். அதனாலே அவர் கையிலே சீட்டைக் கொடுத்தார். அவர் சீட்டை வாங்கி அதனைஅப்படியும் இப்படியும் திருப்பிப் பார்த்தார். அதன் பின் இவரைப் பார்த்து போத்தல் கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு பேரவையின் வெளியீட்டில் அமரசிங்கம் கேதீஸ்வரனின் "மண்" கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. (படம்: சப்தசங்கரி)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை வல்வை ஸ்ரீ வாலாம்பிகா தேவி சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான புனராவர்த்தன அஷ்ட பந்தன சப்தாதச குண்டபஷ உத்தம மகாயாக பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.45-7.45 வரை நடைபெறவுள்ளது. (நி-8)

## 33 இந்திய மீனவர்கள் தலைமன்னார் கடற்பரப்பில் கைது

(கொழும்பு)

தலைமன்னாருக்கு வடக்காக உள்ள கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 33 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது குறித்த மீனவர்களுடைய 3 படகுகளும் பறிமுதல் செய்யப் பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இலங்கை கடற்படையினர் நேற்று அதிகாலை முன்னெடுத்த வழமையான கண்காணிப்பு நடவடிக்கையின் போது குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி-8-316)

## சிவயோக சுவாமிகளின் குருபீட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனை குருபீட அறக்கட்டளை, வட இலங்கை சர்வோதயம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இடம்பெறும் சிவயோக சுவாமிகள் நற்சிந்தனை குருபீட திறப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.06 மணிக்கு புங்குடுதீவு வட இலங்கை சர்வோதய சேவை வளாகத்தில் இடம்பெறும்.

குருபீடத்தை தீபன் கோபாலபிள்ளை (கனடா) திறந்து வைப்பதுடன் திருமதி கமலாதேவி கோபாலபிள்ளை நினைவுக்கல்லினை திரைநீக்கம் செய்து வைப்பார்.

இந்நிகழ்விற்கான நற்சிந்தனைகளை யாழ். அறிவுத்திருக்கோயில் தலைவர் மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல், தீபன் கோபாலபிள்ளை (கனடா), தொல்புரம் சர்வோதய கிராமோதய நிலைய இணைப்பாளர் கிருஸ்னர் நடராசா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி-8)

## இனங்களுக்கு இடையே சகவாழ்வை கட்டியெழுப்பும் செயற்றிட்டம்

(மன்னார்)

அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா மன்னார் நகரக் கிளையின் ஏற்பாட்டில் இனங்களுக்கிடையே சகவாழ்வை கட்டியெழுப்பும் செயற்றிட்டத்தின் கீழ் முதல் கட்டமாக கிறிஸ்தவ மதத்தலைவரை சந்திக்கும் நிகழ்வு அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா மன்னார் நகரக் கிளையின் தலைவர் அஷ்ஷேஹ் அஸீமின் (அத்லி) தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த நிகழ்வின் முதல் சந்திப்பாக மன்னார் தோட்டவெளி பங்குத் தந்தையும் மன்னார் மறைக் கோட்ட முதல்வருமான அருட்திரு. தமிழ்நேசன் அடிகளாருக்கும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மன்னார் நகரக் கிளையின் செயற்குழு உறுப்பினர்களுக்குமிடையில் இச் சிநேகபூர்வ சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இதன் போது மன்னார் நகரத்திற்குள் இன நல்லுறவை மேம்படுத்தல் சம்பந்தமான பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன தொடர்சியாக மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக மாவட்ட ரீதியாக பல்வேறு சந்திப்புக்களை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8-285)




### சந்தோஸ்

இந்த உலகத்தில நல்லவங்கள் கெட்டவங்கள் என்று யாரும் இல்லை




நமக்கு பிடித்தால் நல்லவர்கள் பிடிக்கவில்லை என்றால் கெட்டவர்கள் தட்ஸ் ஆல் யுவரானார்...

### அஸ்வினியா


ஞாயிற்றுக்கிழமை காலையில் லேட்டா எழுந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தால் ஐந்து மணிக்கே முழிப்பு வந்துடுதே




இதெல்லாம் என்ன வியாதி என்று தெரியவில்லையே

### சுகந்தன்


படித்த கேள்விக்கு பதில் எழுதும் போது கூட கை வலிக்கவில்லை




ஆனால் படிக்காத கேள்விக்கு கதை எழுதும் போது தான்டா கை வலிக்குது

### கரினா

அந்த காலத்தில் நாங்களால் மூன்றாவது மாடியில் இருந்து கீழே அசால்டா விழுவோம்டா



நீங்கள் என்னடா என்றால் கட்டிலில் இருந்து விழுந்ததுக்கே உடைஞ்சுடுறீங்கள்

### லிதுர்சிகா

சொந்தக்காரங்கள் சந்தோசமாக இருக்க என்ன செய்ய வேண்டும்



அடிக்கடி அவங்களிடம் போய் நம்ம கஸ்டத்தை சொல்லிற்று வந்தால் போதும்

### மிதுனா

நிம்மதியாக பாட்டு கேட்டுக் கொண்டு தூங்கலாம் என்று யூரியூப் வைச்சால்



அதுல வர ad ஸ்கிப் பண்ணவே அடிக்கடி எழுந்திருக்க வேண்டியதா இருக்கு

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 689





**39 ஆம் அத்தியாயம்**
**கஜேந்திர மோட்சம்**

இத்தனை நேரமும் வானதி சிவிகையிலேயே இருந்தாள். சிவிகையை இப்போது இறக்கிப் பூமியில் வைத்தார்கள். வானதி பல்லக்கிலிருந்து வெளியே வந்து நின்றாள். நெருங்கி வந்த ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டே நின்றாள். காலாமுகர்களும் அதே திசையைப் பார்த்துக் கொண்டு மௌனமாயிருந்தார்கள். தண்ணீர் ததும்பிய கழனிகளில் தவளைகள் இட்ட சத்தமும், வாடைக்காற்றில் மரக்கிளைகள் அசைந்த சத்தமும் மட்டுமே கேட்டன.

"ஆம், பெண்ணே! வருகிறவர் முதன் மந்திரி அன்பில் அநிருத்தர்தான். அவருடைய கட்டளையின் பேரில்தான் உன்னை நாங்கள் பிடித்துக்கொண்டு வந்தோம்" என்றான் காலாமுகன்.

இப்போது வானதியை மறுபடியும் திகில் பற்றிக் கொண்டது. அவளை அறியாமல் பீதி நிறைந்த கூச்சல் அவள் தொண்டையிலிருந்து வந்தது.

இதை அடக்கிக் கொள்வதற்காகத் தன்னுடைய வாயைத் தானே பொத்திக் கொள்ள முயன்றாள்.

ஓடித் தப்பிக்கலாம் என்ற எண்ணமே வானதிக்குத் தோன்றவில்லை. அது இயலாத காரியமென்று அவளுக்குத் தெரிந்திருந்தது. இந்தக் காலாமுகர்களிடமிருந்து ஏதேனும் யுக்தி செய்து தப்பினாலும் தப்பலாம், அன்பில் அநிருத்தரிடமிருந்து தப்புவது கனவிலும் நினைக்க முடியாத காரியம்.

அவருடைய அறிவாற்றலும் இராஜதந்திர மும், சூழ்ச்சித் திறனும் உலகப் பிரசித்தமானது. அதோடு சக்கரவர்த்தியிடம் அவர் மிகச் செல்வாக்கு உடையவர் என்பதும் உலகம் அறிந்தது. பழையாறையிலிருந்து அரண்மனைப் பெண்டிர் சோழ சாம்ராஜ்யத்தின் மற்ற அதிகாரிகளையும், சிற்றரசர்களையும் பற்றி வம்பு பேசுவார்கள், ஆனால் அநிருத்தரைப் பற்றி எதுவுமே பேச மாட்டார்கள். அந்தப்புரத்தின் உள் அறைகளிலே மிக மிக அந்தரங்கமாகப் பேசினாலும் அவருடைய காதுக்கு எட்டிவிடும் என்று பயப்படுவார்கள். சக்கரவர்த்தி வேறு எதைப் பொறுத்தாலும் தன் அந்தரங்கப் பிரியத்துக்கும் மரியாதைக்கும் உரிய முதன் மந்திரியைப் பற்றி யாரும் அவதூறு பேசுவதைப் பொறுக்க மாட்டார் என்று அனைவரும் அறிந்திருந்தார்கள்.

இவையெல்லாம் வானதிக்கும் தெரிந்திருந்தன. இளவரசி குந்தவையும் அவரிடம் பெரும் மதிப்பு வைத்திருந்ததை அவள் அறிந்திருந்தாள். ஆகையால் அவரிடமிருந்து தனக்கு உதவியும் பாதுகாப்பும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தாள். இந்தக் காலாமுகர்கள் வேறுவிதமாகச் சொன்னதும் அவளுடைய மனோதிடம் குலைந்தது. அவர் எதற்காக இந்த அனாதைப் பெண்ணைக் கைப்பற்றச் சொல்லியிருக்க வேண்டும்? ஒருவேளை இவர்கள் பொய் சொல்லுகிறார்களோ என்னமோ! வருவது ஒருவேளை பழுவேட்டரையர்களாக இருக்கலாம்.

அல்லது மதுராந்தகரும் அவருடைய பரிவாரங்களாகவும் இருக்கலாம் யாராயிருந்தாலும் ஒன்று நிச்சயம் இளவரசரைப் பற்றித் தனக்குத் தெரிந்த செய்தியை எவரிடமும் சொல்லக் கூடாது. அதனால் தனக்கு என்ன நேர்ந்தாலும் சரிதான்! தன் உயிரே போவதாயிருந்தாலும் சரிதான்! இதைப் பற்றி எண்ணியதும் வானதி குலைந்த மனோதிடத்தை மீண்டும் பெற்றாள். வரட்டும் யாராயிருந்தா லும் வரட்டும். நான் கொடும் பாளூர் வேளிர் வீர பரம்பரையில் வந்தவள் என்பதை நிலை நாட்டுகிறேன். குந்தவைப் பிராட்டியின் அந்தரங்கத் தோழி என்பதையும் காட்டிக் கொடுக்கிறேன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறி



பாலு ராஜா இருவரும் இணைபிரியா நண்பர்கள். இதில் ராஜூவின் நட்பு கொஞ்சமும் சுயனலமில்லாதது. பாலு அப்படியல்ல. கொஞ்சம் அப்படி இப்படி. ராஜாவுக்கு இது தெரியாது. அவன் பாலுவை முழுவதுமாக நம்பினான். பாலு அடிக்கடி ராஜாவிடம் ஐம்பது நூறு என்று கடன் வாங்குவான்.ஆனால் லேசில் திருப்பித் தரமாட்டான்.ராஜாவின் மனைவி அடிக்கடி ராஜாவிடம் ஏன் இப்படிக் கேட்கும் போதெல்லாம் உங்கள் நண்பருக்குக் கடன் கொடுக்கிறீர்கள். அவரோ திருப்பித் தருவதில்லை. நாம் என்ன வசதி படைத்தவர்களா நாமும் சிரமம் தானே படுகிறோம். இப்படிச் சொல்வதால் உங்கள் நண்பரை நான் குறைசொல்வதாய் நினைக்க வேண்டாம் என்பாள்.ராஜூ அதை காதிலேயே வாங்கமாட்டான். அவளும் அதற்குமேல் ஒன்றும் சொல்ல மாட்டாள்.

ஒரு முறை வழக்கம் போல் பாலு ராஜாவிடம் ஆயிரம் ரூபாய் கடன் கேட்டான். உண்மையில் ராஜாவிடம் அவ்வளவு பெரிய தொகை இல்லை. இல்லை என்று நண்பனிடம் சொல்ல ராஜாவுக்கு மனம் வரவில்லை.

மனைவியிடம் சொன்ன போது அவள் மிகவும் கோபித்தாள். நம்மிடம் ஆயிரம் ரூபாய் ஏது? இல்லை என்று உங்கள் நண் பரிடம் சொல்லிவிட வேண்டியதுதானே என்றாள்.

அப்படியெல்லாம் சட்டென சொல்லிவிட முடியாது என்று சொல்லிய ராஜா வீட்டில் இருந்த உடைந்து போன பவுண் மோதிரம் ஒன்றை அடகு வைத்து ஆயிரம் ரூபாயை வாங்கி நண்பன் பாலு விடம் கொடுத்தான். அப்படி மோதிரத்தை அடகு வைத்து பணம் வாங்கிய போது ராஜூவோடு பாலுவும் இருந்தான்.

ராஜூவுக்கும் அவன் மனைவிக்கும் இதன் காரணமாய் சண்டையே வந்து விட்டது. ஆறு மாதமாகியும் பாலு ஆயிரம் ரூபாயைத் திருப்பித் தரவில்லை. அவனிடம் கேட்கச் சொல்லி ராஜாவின் மனைவி ராஜாவை வற்புறுத்தினாள். ராஜாவும் பல முறை மனைவி சொல்லியும் கேட்கவில்லை. அவள் தன் தாய்வீட்டுக்குப் போய் விடுவதாக பயமுறுத்தியதும் மிகவும் பணிவாகவே தன் நண்பன் பாலுவிடம் பணம் பற்றிக் கேட்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற மனிதர்களின் அனுபவத்தைக் கூர்ந்து கேட்கும் ஒவ்வொரு முறையும் எனது பணிவு அதிகரிக்கிறது.
- யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கைது நடவடிக்கைகள் விறுவிறுப்பாக இல்லை

விறுவிறுப்பு என்ற தமிழ்ச் சொல் மனித மனநிலை சார்ந்த சொற்பதம்.

உதாரணத்துக்கு திரைப்படமொன்றில் வில்லன் இழைத்த அநீதிகள், கொடுமைகளின் தாக்கத்தை உள்வாங்கிய ரசிகர்கள்; அதற்கு ஏற்றால்போல் கதாநாயகன், வில்லனைத் தாக்க வேண்டும் என எதிர்பார்ப்பர்.

அவ்விதம் வில்லனைக் கதாநாயகன் தாக்குகின்ற வேகத்திலேயே குறித்த திரைப்படத்தின் வெற்றி தங்கியுள்ளது.

ஆம், ரசிகர்களின் விறுவிறுப்பை சமநிலைப்படுத்துகின்ற வேகத்தில் வில்லன் மீதான கதாநாயகனின் தாக்குதல் இருக்கும் போதுதான், குறித்த திரைப்படம் வெற்றி பெறும்.

இஃது திரைப்படத்தில் மட்டுமல்ல, அனைத்து அம்சங்களுக்கும் பொருந்துவதாகும். அதிலும் குறிப்பாக அரசியலில் மக்களின் மனவேகத்தை ஆட்சியாளர்கள் புரிந்துகொண்டு அதற்கேற்றால்போல் செயற்பட வேண்டும்.

இங்கு மக்களின் மனவேகத்தை - அவர்களின் எதிர்பார்ப்பைக் காலதாமதப்படுத்துகின்ற எவரும் சிறந்த ஆட்சித் தலைவராக, அரசியல்வாதியாக இடம்பிடித்ததில்லை.

அந்தவகையில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, இந்த நாட்டு மக்கள் அவருக்கு எதிராகக் கொண்ட வேகம் - விறுவிறுப்பு ஆட்சியாளர்களைத் துரத்தியது.

அவ்வாறு அன்று மக்கள் கொண்ட எழுச்சியின் வேகமே இந்த நாட்டின் அரசியலில் ஏற்பட்ட மாற்றமாகும்.

உண்மை. அரகல போராட்டம் நடந்திருக்காவிட்டால், அநுர ஜனாதிபதியாக வாய்ப்பில்லை.

ஆக, அநுர அரசாங்கம் ஆட்சிப்பீடத்தில் அமர்வதற்கு மூலகாரணம், அநீதிக்கு - அதர்மத்துக்கு எதிராக மக்கள் கொண்ட பேரெழுச்சியாகும்.

எனவே மக்களின் பேரெழுச்சிக்கு ஈடாக ஜனாதிபதி அநுரவின் நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

ஆம், அரகல போராட்டம் என்பது ஊழலுக்கும் அநீதிக்கும் குற்றச் செயலுக்கும் எதிரானதாகும்.

எனவே ஊழலை ஒழிப்பதிலும் குற்றச் செயல்களை இல்லாது செய்வதிலும் அரசாங்கம் மிகவும் வேகமாகவும் இறுக்கமாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக, அரச சொத்துக்களைக் களவாடியவர்கள், கபளீகரம் செய்தவர்களை உடனடியாக கைது செய்து அவர்களிடம் உள்ள அரச சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டும். இதுவே மக்களின் முதற்தர விருப்பம்.

இருந்தும் அது விடயத்தில் அரசாங்கத்தின் வேகமும் விறுவிறுப்பும் போதுமானதாக இல்லை. இந்தநிலைமையானது அநுரவின் அரசாங்கத்துக்கு எதிரான எண்ணக்கருவை - கருத்துருவாக்கத்தை ஏற்படுத்திவிடும்.

ஆகவே அநுரவின் அரசாங்கமும் மந்தமாக நகர்கிறது என்ற கருத்துப் பொதுமக்களிடம் ஏற்படுவதற்கு முன்னதாக, குற்றமிழைத்தவர்களைக் கைது செய்வதிலும் அவர்களுக்குத் தண்டனை வழங்குவதிலும் அரசாங்கம் அசுர வேகத்துடன் செயற்பட வேண்டும்.

அப்போதுதான் அநுரவின் ஆட்சி - காட்சி வெற்றி நடைபோடும்.

### இலங்கையின் உற்ற சகா பாரதமே

# இடருறும் தருணங்களில் ஆபத்பாந்தவனாக இந்தியா என்றும் முன்னிற்கும் என்பது உறுதி

## தோழமை பாராட்டினார் இந்திய பதில் உயர்ஸ்தானிகர்

*(கொழும்பு)*

"இலங்கையின் நம்பகத்தன்மை மிக்க நண்பர் இந்தியா என்பதை மீண்டும் மீண்டும் இந்தியா நிரூபித்துள்ளது" என குறிப்பிட்டுள்ள இலங்கைக்கான இந்திய பதில் உயர்ஸ்தானிகர் சத்யாஞ்சல் பாண்டே, "நமது கதைகள் பின்னிப்பிணைந்துள்ளன. நம் எதிர்காலம் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் 76ஆவது குடியரசு தின உரையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, "இலங்கை இந்தியாவின் ஒரு முக்கிய பங்காளியாக உள்ளது. இந்தியாவும் இலங்கையும் சக ஜனநாயக நாடுகள் மாத்திரமல்ல. நாங்கள் நமது பன்முகத்தன்மை மற்றும் முனைப்புடமை ஆகியவற்றையும் பகிர்ந்துகொள்கின்றோம்.

நாங்கள் நாகரிகம் மிக்க சகாக்கள். எங்கள் வரலாறு, மொழி, மதம், நெறிமுறைகளை தொடர்ந்தும் பகிர்ந்துகொள்கின்றோம். நமது வரலாறுகள் பின்னிப்பிணைந்துள்ளன. எங்களின் எதிர்காலம் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டது.

இலங்கையுடனான புவியியல்ரீதியிலான நெருக்கம் எங்களை இயற்கையான பங்காளிகளாக மாற்றியுள்ளது. அதே வேளை அருகில் இருப்பதால் இரு நாடுகளும் பரஸ்பரம், ஏனைய நாட்டின் நலன்கள் குறித்த உணர்வை கொண்டிருப்பது அவசியமாகிறது.

மேலும், மூன்றாம் தரப்பின் அழுத்தங்களால் பாதிக்கப்படாமல் நாம் ஒருவரையொருவர் ஆதரிக்கவேண்டும்.

இந்தியா, இலங்கையின் நம்பகமான சகா என்பதை - இலங்கையின் நம்பகத்தன்மை மிக்க நண்பர் என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளது. இயற்கை பேரிடர்களாக இருக்கலாம், கடலில் ஏற்படும் விபத்துக்களாக இருக்கலாம், கொவிட் பெருந்தொற்றாக இருக்கலாம் அல்லது சமீபத்திய பொருளாதார நெருக்கடியாக இருக்கலாம், எதுவாக இருந்தாலும் இந்தியா முதலாவது நாடாக இலங்கைக்கு உதவியது.

எங்கள் ஆதரவு உரிய தருணத்தில் விரைவானதாக நிபந்தனையற்றதாக காணப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார். (ந-7)

### புதிய அரசு பதவியேற்கும் வரை

# முக்கிய புள்ளிகளின் இரகசிய கோப்புக்களை மறைத்த அதிகாரி

## ■ ■ ■ ■ ஜனாதிபதி புகழாரம் ■ ■ ■ ■

*(கொழும்பு)*

சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட அதிகாரியொருவர் முக்கியமான கோப்பு ஒன்றினை புதிய அரசாங்கம் பதவியேற்கும் வரை மறைத்துவைத்திருந்தார் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அந்த அதிகாரியைப் பாராட்டியுள்ளார்.

முன்னைய அரசாங்கத்தின் தலையீட்டினைத் தவிர்ப்பதற்காகவே அந்த அதிகாரி குறிப்பிட்ட கோப்பினை சமர்ப்பிக்காமல் வைத்திருந்தார் எனவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவ்வேளை அந்த வழக்கைத் தாக்கல்செய்திருந்தால் அந்தப் பெண் அதிகாரியை பதவியிலிருந்து நீக்கியிருப்பார்கள் அல்லது அந்த வழக்கை குழப்பியிருப்பார்கள் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி இதன் காரணமாக புதிய அரசாங்கம் பதவியேற்க்கும்வரை அந்த அதிகாரி அந்த முக்கிய கோப்பினை சமர்ப்பிக்காமல் வைத்திருந்தார்.

ஊழல் மோசடிகள் குறித்த விசாரணைகளில் பொலிஸார் உட்பட சட்ட அமுலாக்கல் தரப்பினர் எந்த விதத் தலையீடும் இன்றி செயற்படுகின்றனர் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, பிணைவழங்குவது சட்ட செயற்பாடுகளில் ஒரு பகுதி. அது அரசாங்கத்தின் பலவீனம் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களம் 11 குற்றங்களை அடையாளம் கண்டுள்ளது, இதில் மூன்று குறித்து ஜனவரியில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என தெரிவித்துள்ள ஜனாதிபதி நாங்கள் தனிப்பட்ட நலன்கள், நோக்கங்கள் அடிப்படையில் இந்த வழக்குகளைத் தெரிவு செய்யவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (ந-7)

# காலிச் சிறையில் குழு மோதல்

## நால்வர் காயம்

*(காலி)*

காலிச் சிறைச்சாலையில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் கைதிகள் நால்வர் காயமடைந்துள்ளதாகச் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி பி.திசாநாயக்க தெரிவித்தார்.

இந்நிலையில், காயமடைந்த 4 பேரும் சிகிச்சைக்காக காலி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நிலைமையைக் கட்டுப்படுத்தப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் தற்போது வரவழைக்கப்பட்டுள்ளனர். (ந-7)

# சட்டவிரோத மீன்பிடி மூவர் நேற்றுக் கைது

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட மூவரை நேற்றுக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

மேற்கு கடற்படை கட்டளைத் தளபதி ரங்கல்ல மேற்கொண்ட இந்த நடவடிக்கையின் போது, கொழும்புத் துறைமுகத்திற்கு வெளியே உள்ள கடலில் சந்தேகத்திற்கிடமான ஒரு டிங்கி படகு சோதனை செய்யப்பட்டது.

சோதனையின் போது, ஈட்டித் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டதற்காக மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த சட்டவிரோத நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்ட டிங்கி படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 47 முதல் 62 வயதுக்குட்பட்ட தெஹிவளைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில்,

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், டிங்கி படகு மற்றும் மீன்பிடி உபகரணங்கள், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திக்கோவிட்ட மீன்வள ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டன. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் பகுதி - II

08

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**நல்லூர் பிரதேச சபைத் தேர்தல் – 2018**
**கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை**

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | நல்லூர் பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 12 பல்-0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 12 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 20 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 5,953 | 31.87% | 6 | 6 | - | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 4,339 | 23.23% | 5 | 2 | 3 | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 3,562 | 19.07% | 4 | 3 | 1 | - |
| சுயேச்சைக் குழு | 1,983 | 10.62% | 2 | - | 2 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 903 | 4.83% | 1 | - | 1 | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 884 | 4.73% | 1 | - | 1 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 716 | 3.83% | 1 | 1 | - | - |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 274 | 1.47% | - | - | - | - |
| மக்கள் விடுதலை முன்னணி | 63 | 0.34% | - | - | - | - |
| மொத்தம் | 18,677 | 100% | 20 | 12 | 8 | - |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 18,677 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 327 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 19,004 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 27,100 |

**நல்லூர் பிரதேச சபைத் தேர்தல் – 2018**

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | காரைக்கால் | J 115, J 117 | ITAK | 647 |
| 2 | கோண்டாவில் வடக்கு | J 118, J 119 | ITAK | 683 |
| 3 | கோண்டாவில் கிழக்கு | J 116, J 120 | ITAK | 661 |
| 4 | கொக்குவில் மேற்கு | J 124, J 128 | ITAK | 465 |
| 5 | கோணியடி | J 99ன் பகுதி, J 125, J 127 | TC | 744 |
| 6 | கொக்குவில் மத்தி | J 121, J 123ன் பகுதி | ITAK | 479 |
| 7 | கொக்குவில் கிழக்கு | J 122 J 126 | ITAK | 716 |
| 8 | திருநெல்வேலி மத்தி | J 114 | EPDP | 526 |
| 9 | திருநெல்வேலி | J 110, J 111 | TC | 522 |
| 10 | கல்வியங்காடு தெற்கு | J 112, J 113 | TULF | 436 |
| 11 | அரியாலை கிழக்கு | J 94ன்பகுதி, J 96ன் பகுதி | EPDP | 102 |
| 12 | மணியந்தோட்டம் | J 89, J 90 | EPDP | 655 |

**பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தேர்தல் – 2018**
**கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை**

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 8 பல்-0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 8 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 13 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 2,953 | 43.74% | 6 | 6 | - | - |
| சுயேச்சைக் குழு | 2,070 | 30.66% | 4 | 2 | 2 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 651 | 9.64% | 1 | - | 1 | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 465 | 6.89% | 1 | - | 1 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 330 | 4.89% | 1 | - | 1 | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 179 | 2.65% | - | - | - | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 59 | 0.87% | - | - | - | - |
| லங்கா சமசமாஜக் கட்சி | 44 | 0.65% | - | - | - | - |
| மொத்தம் | 6,751 | 100% | 13 | 8 | 5 | - |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 6,751 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 109 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 6,860 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 10,220 |

**பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தேர்தல் – 2018**

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | முகமாலை | KN 91, KN 92, KN 93 | IND | 381 |
| 2 | கிளாலி | KN 89, KN 94, KN 95 | IND | 279 |
| 3 | பளை | KN 90, KN 87, KN 88 | ITAK | 354 |
| 4 | தம்பகாமம் | KN 86 | ITAK | 425 |
| 5 | முல்லையடி | KN 84, KN 85 | ITAK | 378 |
| 6 | சோரன்பற்று | KN 82, KN 83 | ITAK | 607 |
| 7 | முகாவில் | KN 80, KN 81 | ITAK | 268 |
| 8 | முள்ளிப்பற்று | KN 79, KN 78 | ITAK | 354 |

வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 12 ஆகும்.

நல்லூர் பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 22.21 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2020ம் ஆண்டுச் சனத் தொகை கிட்டத்தட்ட 41037 பேர்.

2018 ஆம் ஆண்டு பிரதேச சபைத்தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 27100 ஆகும்.

இத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP), சுயேச்சைக் குழு(IND), மக்கள் விடுதலைக் கூட்டணி (JVP) மற்றும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) ஆகியன போட்டியிட்டன.

## 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் - கிளிநொச்சி மாவட்டம்

### 01.பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் மொத்தமாக 18 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பிரதேச சபை 8 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை எல்லாம் தனி உறுப்பினர் வட்டாரங்களாகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 8 ஆகும்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 164.15 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத்தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 10220 ஆகும்.

இத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), சுயேச்சைக் குழு (IND), லங்கா சமசமாஜக் கட்சி (LSSP) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) ஆகியன போட்டியிட்டன.

### 02. கரைச்சி பிரதேச சபை

கரைச்சி பிரதேச சபையில் மொத்தமாக 58 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பிரதேச சபை 21 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை எல்லாம் தனி உறுப்பினர் வட்டாரங்களாகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 21 ஆகும்.

கரைச்சி பிரதேச சபையின் விஸதீரணம் கிட்டத்தட்ட 674.17 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2020ஆம் ஆண்டுச் சனத் தொகை கிட்டத்தட்ட 97594 பேர். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத்தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 61315 ஆகும்.

இத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), சுயேச்சைக் குழு(IND), அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுன (SLPP) மற்றும் மக்கள் விடுதலைக் கூட்டணி (JVP) ஆகியன போட்டியிட்டன.

### 03.பூநகரி பிரதேச சபை

பூநகரி பிரதேச சபையில் மொத்தமாக 19 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பிரதேச சபை 11 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை எல்லாம் தனி உறுப்பினர் வட்டாரங்களாகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 11 ஆகும்.

பூநகரி பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 440.68 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2020 ஆம் ஆண்டுச் சனத் தொகை கிட்டத்தட்ட 23399 பேர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்வாதி...

துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள சட்டமா அதிபர் திணைக்களம், குறித்த அரசியல்வாதிகளுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்வது தொடர்பான காரணிகள் ஆராயப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய சம்பவங்கள் தொடர்பாக கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சில குறைபாடுகள் காணப்படுவதால், அந்த விசாரணைகளை மீண்டும் முன்னெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம் மேலும் குறிப்பிட்டது. (ந-7)

## ரோஹிங்கியா...

கொள்ளவுள்ளது என ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே ப்ரான்ச் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே ப்ரான்ச் மற்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் அருண் ஹேமசந்திர ஆகியோருக்கும் இடையில் நேற்று முன்தினம் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது ஐ.நா வதிவிடப் பிரதிநிதி ரோஹிங்கியா முஸ்லிம் மக்களை இலங்கை பாதுகாக்கும் விதம் குறித்துப் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

மேலும் அந்த மக்களை மீண்டும் மியன்மாருக்கு அனுப்பாமல் பாதுகாப்பான ஒரு நாட்டில் தங்க வைப்பது குறித்து ஐக்கிய நாடுகள் சபை அவதானம் செலுத்தியுள்ளது. அதுவரை ரோஹிங்கியா முஸ்லிம் மக்களை இலங்கை பாதுகாப்புடன் நடத்தும் என்று நம்புகின்றோம்.

அத்துடன் ரோஹிங்கியா முஸ்லிம் மக்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் அறிவிப்பு பாராட்டுக்குரியது என்றார். (ந-7)

## அடிப்படைச்...

மூன்று வருடங்களுக்குள் முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பான முன்மொழிவுகள் இந்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் முன்வைக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உறுதியளித்துள்ளார்.

அநுராதபுரம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற அநுராதபுர மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள் உரிமை என்ற வகையிலும் அரச அதிகாரிகளின் பொறுப்பு என்ற வகையிலும் அரச சேவையை பலப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி அநுர தெரிவித்தார்.

தற்போதுள்ள அரச சேவையில் பொதுமக்கள் திருப்தியடையவில்லை எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரசாங்க சேவையை டிஜிட்டல் மயமாக்குவதன் ஊடாக பிரஜைகளுக்கு வினைத்திறனான சேவையை வழங்க எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அரச சேவையை வலுப்படுத்துவது மற்றும் அரச சேவைக்கான செலவை நிர்வகிப்பதன் அவசியம் குறித்து இக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில், அரச சேவையில் காணப்படும் அத்தியாவசியமான 30 ஆயிரம் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், அது தொடர்பான நிதி ஒதுக்கீடுகளுக்கான முன்மொழிவுகளை இவ்வருட வரவு செலவுத்திட்டத்தில் முன்வைப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், தொழில்நுட்பக் காரணங்களால் நேர்முகப் பரீட்சைகள் தாமதமாகக்கூடிய விடயம் குறித்தும் இங்கு ஆலோசிக்கப்பட்டதுடன், ஒருங்கிணைந்த அரச சேவை மூலம் மனித வளத்தைச் சரியான முறையில் முகாமைத்துவம் செய்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (ந-7)

## எம்.ஏ.சுமந்திர...

பாதுகாவலர்களை நியமித்தமை தொடர்பில் அரசியல் வட்டாரங்களில் வாதப்பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அமைச்சர்களுக்கான பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளபோது, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு இரண்டு மெய்ப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அரசாங்கம் எதற்காக வழங்கியது என்ற விடயம் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

## தடம்புரண்டது...

புகையிரத நிலையத்துக்கு அருகில் நேற்று மாலை 4 மணியளவில் தடம் புரண்டுள்ளது.

குறித்த புகையிரதத்தின் பெட்டிகள் தண்டவாளத்திலிருந்து விலகியமையால் குறித்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது.

தெய்வாதீனமாக குறித்த விபத்தில் பயணிகளுக்கு எதுவிதப் பாதிப்பும் ஏற்படவில்லை. எனினும் புகையிரதத் தண்டவாளம் பலத்த சேதமடைந்துள்ளது.

இதன் காரணமாக யாழ். கொழும்பு இடையிலான புகையிரதச் சேவைகள் பாதிப்புற்றுள்ளன.

நிலைமையைச் சீர்செய்யப் புகையிரதத் திணைக்கள ஊழியர்கள் துரித செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7)

## கசூரினா...

கடலில் நேற்று நீராடிய ஆறு பேர் விசப்பாசித் தாக்கத்துக்கு ஆளாகியுள்ளனர்.

இதனையடுத்து குறித்த ஆறுபேரும்காரை நகர்ப் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-7)

## விடு...

இரத்துச் செய்யப்பட்ட தனது பாதுகாப்புப் பிரிவை மீள வழங்குமாறு உத்தரவிடக் கோரி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தாக்கல் செய்த அடிப்படை உரிமை கோரல் மனுத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதுகாப்பினை அதிகரிக்கக் கோரி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் வழக்கு நாட்டில் சிறந்தவொரு வழக்காக அமையும்.

நாட்டின் பாதுகாப்புச் சபை அறியாத நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மீள் எழுச்சி குறித்த தகவல்கள் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினரிடம் இருந்தால் அவற்றை நீதிமன்றத்தின் ஊடாக நாட்டுக்கு வெளிப்படுத்துவதே சிறந்ததாகும். அவை தேசிய பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமையும்.

புலனாய்வு மற்றும் பாதுகாப்பு அறிக்கைகளின் அடிப்படையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்புச் சபைக்கு அப்பாற்பட்ட தகவல்கள் அவர்களிடம் காணப்பட்டால் அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கமையவே அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார். (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.01.26
சீட்டிழுப்பு இலக்கம் 5728
E 2 8 4 5 9 6
அத சம்பத E 4 5 9 6
சீட்டிழுப்பு இலக்கம் 303

தன நிதானய
திகதி - 2025.01.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1758
X 30 41 50 77 X
44237

மெகா பவர்
திகதி 26/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2076
K 07 17 33 47 74

லக்சி 7 VIP
திகதி 2025.01.26
சீட்டிழுப்பு இலக்கம் 554
T 2 3 2 3 7 8 T

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3970
சீட்டிழுப்பு திகதி 26.01.2025
U 25 50 51 65
U

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.26
சீட்டிழுப்பு இலக்கம் 1037
மேடம் 13 16 29 43 மேடம்
64735 43

உத்தியோகபூர்வ முடிவுகள்
26.01.2025 வெற்றி வாரம் 436
D 3 3 2 3 9 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,883,534.00
79761

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2702
சீட்டிழுப்பு திகதி 2025.01.26 தினம் ஞாயிற்றுக்கிழமை
01 19 42 65 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 82,274,805.60

சனிதா
திகதி 26.01.2025 வெற்றி வாரம் 4863
04 23 35 48 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,163,406.80
54332

சசிரி
வெற்றி வாரம் 609
26.01.2025 ஞாயிற்றுக்கிழமை
05 07 12
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4414
சீட்டிழுப்பு திகதி 26.01.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
13 37 52 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,131,680.80
261207

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 26 03 24 27 57
1878
26.01.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.563,173,727.00

ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,107,828.80
வெற்றி வாரம் : 2528
சீட்டிழுப்பு திகதி : 2025.01.26
அத கோடிபதி ADA KOTIPATHI
01 07 53 71 U
832574

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (3220)

076 825 7716 (ஆகாஸ்)


## தவறிவிட்டது

யாழ்.வண். பெருமாள் ஆலயச் சூழலில் கறுப்பு நிறப் பை ஒன்று தவறிவிட்டது. அதில் ந.அமிர்தநாதன் (611751729V) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுதிப்பத்திரம் என்பன உள்ளிருந்தது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**(சன்மானம் வழங்கப்படும்)**

**077 760 6101** (3224)

## ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம் கொக்குவில்

### வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

மேற்படி ஆலய வருடாந்தப் பொதுக் கூட் டமும் நிர்வாக சபைத் தெரிவும் 2025.02.16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். பிரேரணைகள் ஏதும் இருப்பின் 2025.02.02 மாலை 05 மணிக்கு முன்னர் எழுத்து மூலமாக செயலாளரிடம் சமர்ப்பிக்கவும். (3218)

செயலாளர்
ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்
கொக்குவில்


V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-2140)

மாபெரும் விலைக்கழிவில் No.1
பாடசாலை அப்பியாசக் கொப்பிகள்

| | |
|---|---|
| B5 200 Page | - 275/- |
| B5 160 Page | - 227/- |
| A5 200 Page | - 160/- |
| A5 160 Page | - 135/- |
| A5 120 Page | - 100/- |
| A5 80 Page | - 70/- |
| A5 40 Page | - 50/- |
| A5 120 Page Jaffna Rule Blank Page | - 100/- |
| 120 Page Drawing Book | - 100/- |
| 40 Page | - 110/- |
| CR 200 Page | - 295/- |

(3227)

கையிருப்பு உள்ளவரை மட்டுமே இச்சலுகை
"கல்வியால் சமூகத்தினை உயர்த்துவோம்"
WINSTAR BOOK SHOP
154, 1ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
071 071 6979

X MARD
கோப்பாய், மருதனார்மட கிளைகளில்
இதே விலைகளில் பொருட்களை
கொள்வனவு செய்ய முடியும்.

| Price | Item | Note |
|---|---|---|
| Rs. 219.00 | வெள்ளைச் சீனி | Bulk, Max 2kg |
| Rs. 159.00 | கோதுமை மா | Bulk, Max 2kg |
| Rs. 389.00 | மஞ்சள் பருப்பு | |
| Rs. 749.00 | செத்தல் மிளகாய் | Bulk |
| Rs. 979.00 | Anchor 400g | Max 1 PCS |
| Rs. 289.00 | ரவை | Bulk |
| Rs. 49.00 | Anchor Yoghurt | 80 |
| Rs. 1749.00 | Protinex | Max 1 PCS, 2100 |
| Rs. 339.00 | Vim Liquid | 425 |
| Rs. 2499.00 | Vitagen Vannila | 3000 |
| Rs. 339.00 | Sunlight Powder Rose | 380 |
| Rs. 1129.00 | Anchor Plus | 1190 |
| Rs. 139.00 | Santoor Soap | 175 |
| Rs. 399.00 | Chick Shampoo | 480 |
| Rs. 2999.00 | Diabeta Plus | 3335 |
| Rs. 349.00 | Ocean Star Mackerel | 500 |
| Rs. 919.00 | Primo Wheat Flour | 5kg, 1150 |
| Rs. 3349.00 | Sustagen 400g | Max 1 PCS, 3900 |
| Rs. 149.00 | Noodles | 200 |
| Rs. 349.00 | Pepsi 1.5L | 400 |
| Rs. 199.00 | Fems 10 Pcs Pads | 270 |
| Rs. 799.00 | Marvel 16 Pcs | 1200 |
| Rs. 459.00 | Cute Baby Wipes | 698 |
| Rs. 2699.00 | Vijitha 10Kg | 3000 |

மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
(கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு அருகாமையில்)
074 2327 545
மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும், வட இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்)
074 1011 345
(C-2141)


## இரண்டாம் மொழி சிங்களம் - 2025

தரம் 6, தரம் 10 வகுப்புக்களுக்கான இரண்டாம் மொழி சிங்களம் புதிய பிரிவுகளுக்கான வகுப்புக்கள் ஆரம்பம்.


**27.01.2025 - திங்கட்கிழமை** (783)

இடம்: " இலங்கை வேந்தன் திருமண மண்டபம் அருகில் "
இல. 55/6, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

தொடர்பு:
**077 990 6867, 076 007 1688**


யாழ்ப்பாணம் - சென்னை
விமான சேவைகள்
யாழ் - சென்னை விமானப்
பயணச் சீட்டுக்கள்
விசேட விலையில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் அனைத்து நாடுகளுக்குமான
ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (785)
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 31.12.2024 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் சின்னப்பு பிரேமநாதன்

**(ஓய்வுபெற்ற முகாமையாளர் – ப.நோ.கூ.சங்கம் அச்சுவேலி)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 28.01.2025 நாளை செவ்வாய்க் கிழமை காலை 6.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 30.01.2025 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தாங்கள் இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.** (C-2139)

பேக்கரி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர். 077 112 4034

தகவல் :
குடும்பத்தினர்

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
12 . 01 . 1985



ஆண்டவன் அடியில்
27 . 01 . 2019

### அமரர் திருமதி பிருந்தா குலதீபன்

**(தாதிய உத்தியோகத்தர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை)**

புன்னகை பூத்த மலரொன்று
பூமியில் விதைக்கப்பட்ட நாள் இன்று
கள்ளமற்ற புன்னகை இளவரசி ஒன்று
மறைந்து போன நாள்
அமைதியான ஏவுகணை ஒன்று
எங்களை அழவைத்த நாள்
அக்னி சிறகொன்று பறந்து
ஆகாயத்தில் மறைந்த நாள் இன்று
இலக்கே கனவென்ற இமயம்
இதயம் விம்ம சரிந்த நாள்
நீறாகிப் போனாலும் எங்கள் நெஞ்சங்களில்
நிறைமதியாய் வாழ்வாய் தங்கமே
உன் ஆத்மா சாந்தி அடையட்டும்.

**என்றென்றும் உன் நினைவுகளுடன்**
**அம்மா, அக்காமார் (மீரா, மதுரா), மகள் குயின்சிகா, மைத்துனர்மார், பெறாமக்கள்** (C-2137)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தா[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org